31/3

PUBLIC LIBRARY
JAFFNA.

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

தேசிய முரசொலி

දේශීය මුරසොලි

THESIYA MURASOLI

செல்லரித்த மானிடத்தில்
சீர்திருத்தப் பாடினேன்
சீர்திருத்தப் பாடியதால்
பேர்திருத்தம் ஆகினேன்

முரசு~12 | 2005~மார்ச் | முழக்கம் ~20

# ஜனவசம கூட்டுதாபன தோட்டங்களை தனியார் மயப்படுத்த அரசாங்கம் முஸ்தீப்பு!

அரச நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஜனவசம அரச பெருந்தோட்ட யாக்க நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 35 தேயிலை, இறப்பர் தோட்டங்களை தனியார் மயப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமான கேளவிப்பத்திரங்களை தனியார் துறையினரிடம் இருந்து கோரியுள்ளது.



சுமார் 10 வருட காலமாக இத்தோட்டங்கள் முறையாக நிர்வகிக்கப்படாமலும் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படாமலும், நஷ்டத்தில் இயங்குகின்ற நிலைக்கு தள்ளப்பட்டதற்கான முழுப் பொறுப்பையும் அரசும் இவ்விரண்டு நிர்வாக சபைகளினது தலைவர்களும், இயக்குனர்களும், தோட்ட அதிகாரிகளுமே ஏற்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.வேலாயுதம், ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1 ½ நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்நாட்டிற்கு அந்நிய செலாவணியைப் பெற்றுத் தருவதில் பாரிய பங்காற்றி வருகின்ற தோட்ட தொழிலாளர்களின் எதிர்காலம் குறிப்பாக ஜனவசம அரச பெருந்தோட்ட கூட்டுதாபனத்தைச் சார்ந்த 35 தோட்டங்களில் வேலை செய்கின்ற 40,000 ற்கு மேற்பட்ட தொழிலாளர்களின் எதிர்காலம் இன்று பெரும் கேள்விக்குரியாக மாறியுள்ளது.

ஜனவசம பெருந்தோட்ட கூட்டுதாபன நிர்வாகங்களில் இடம்பெற்று வந்த நிர்வாக சீர்கேடுகளை இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் காலத்திற்கு காலம் சுட்டிக் காட்டி வந்துள்ளது. 2003 ம் ஆண்டின் நடுப்பகுதியில் இத் தொழிலாளர்களுக்கு ஜனவசமும், கூட்டுதாபனமும் அவர்களது சம்பளத்தை வழங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட போது அன்றைய பிரதமருடன் தாம் தொடர்பு கொண்டு தொழிலாளர் சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். ஆனால், இன்று மீண்டும் இந்த இயலாத நிலைமை தோன்றியுள்ளது.

1980 களுக்கு முன்னால் தோட்டத் தொழிலில் ஈடுப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 1,000,000 ஆக இருந்தது. பெருந்தோட்டத் துறை சமூகத்தைச் சேர்ந்த தொழிலுக்குரிய வயதை அடைந்த அனைவருக்குமே தொழில் வழங்கக் கூடிய நிலையில் அன்று தோட்டங்கள் இருந்தன. ஆனால், தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டதன் பின்னர்

தொடர்ச்சி 6 ம் பக்கம்.........



# தைப்பொங்கல் மாட்டு பொங்கல் தினங்களில் ஆடு மாடுகள் வெட்டப்படுவது தடை செய்யப்படும்.

### ஊவா மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றம்~கே.வேலாயுதம்

விவசாயிகளுக்கு தமது முழு உழைப்பையும் வழங்கி கொண்டிருக்கும் ஆடு மாடுகள் தைப்பொங்கல் தினத்தன்றும் அதற்கு மறு தினமான மாட்டுப் பொங்கல் தினத்தன்றும் இறைச்சிக்காக வெட்டப்படுவதனையும் விற்பனை செய்யப்படுவதனையும் சட்ட பூர்வமாக தடை செய்ய ஊவா மாகாண சபை உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஊவா மாகாண சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் க.வேலாயுதம் இம் மாகாண சபையின் மாதாந்த கூட்டத்தின் போது பிரேரணை ஒன்றை சமர்பித்து பேசுகையில் குறிப்பிட்டார்.

சபைத் தலைவர் மானெல் ரட்னாயக தலைமையில், கடந்த வியாழக்கிழமை ஊவா மாகாண சபை மண்டபத்தில் நடைப்பெற்ற இக்கூட்டத்தில் வேலாயுதம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது ,

விவசாயிகளுக்கு உறு துணையாக இருக்கும் சூரிய பகவானை வணங்கி நன்றி கூறும் தினமே தைப்பொங்கல் தினமாகும். அதே போன்று விவசாயிகளுக்கு உற்ற துணையாக முழுமையான உழைப்பினை வழங்கி கொண்டிருக்கும் ஆடு மாடுகளுக்கு நன்றி கூறும் தினமாகவே தைப்பொங்கலுக்கு மறு தினமான மாட்டுப் பொங்கல் தினம் கொண்டாடப்படுகின்றது.

அத்தகைய இரண்டு புனித தினங்களிலும் ஆடு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையினை கவலையுடன் காணக்கூடியதாக இருக்கின்றது.

இத் தினங்களில் ஆடு மாடுகளை புனிதமாக கௌரவித்து வரும் இந்து மக்களை புண்படுத்தும் வகையில் மாடுகளை வெட்டி

தொடர்ச்சி 3 ம் பக்கம்..........

# திஸாநாயக்கவை விடுவிக்கக் கோரி கண்டியில் ஐக்கிய தேசிய கட்சி சத்தியாக்கிரகம்



முன்னால் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி திஸாநாயக்கவை விடுதலை செய்ய கோரி ஐக்கிய தேசிய கட்சியினர் மேற்கொண்ட சத்தியாக்கிரக போராட்டம் நேற்று திங்கட் கிழமை மாலை கண்டி ஸ்ரீ தலதா மாளிகை முன்றலில் நடைப்பெற்றது.

இப்போராட்டத்தில் முன்னால் அமைச்சர்களும் ஐ.தே.க முக்கியஸ்தர்களுமான ராஜித சேனாரட்ண, பந்துல குணவர்தன, லக்ஸ்மன் கிரியெல்ல, அலிக் அலுவிகார, திஸ்ஸ அத்தநாயக, கெகெலிய ரம்புக்வெல மற்றும் திஸாநாயக்கவின் பாரியார் தமரா திஸாநாயக்க, பௌத்த பிக்குகள் மத்திய மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஐ.தே.க உறுப்பினர்கள் தலைவர்கள் மேயர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

சத்தியாகிரகத்திற்கு முன்னர் தெய்யான வெல விளையாட்டுத் திடலிலிருந்து கண்டி மாத்தளை மாவட்டங்களை சேர்ந்த பெரும் திரளான ஐ.தே.க ஆதரவாளர்கள் எஸ்.பி திஸாநாயக்கவின் படங்கள் அவரை விடுவிக்க கோரும் சுலோகங்களை ஏந்தியவாறு கண்டி புகையிரத நிலைய வீதி தலதா வீதிகளினூடாக ஊர்வலமாக சென்று தலதா மாளிகை முன்றலை வந்தடைந்தனர்.

சுமார் 20 நிமிடம் நடைப்பெற்ற இச்சத்தியா கிரகத்தை அடுத்து அங்கு விசேட மலர் பூஜைகள் நடைப்பெற்றன. அதனைத் தொடர்ந்து தலதா மாளிகையின் அருகிலுள்ள விஷ்ணு நாத பத்தினி கதிரேசன் ஆலயத்துக்கும் சென்று விசேட வழிபாடுகளில் அவர்கள் ஈடுப்பட்டனர்.

இவ்வார்ப்பாட்டத்துக்கு முன்னர் எஸ்.பி.திஸாநாயக்கவை விடுவிக்க கோரி ஒரு இலட்சம் கையொப்பங்களை சேர்க்கும் பொருட்டு பொது மக்களிடம் கையொப்பம் பெரும் நடவடிக்கையை ஐ.தே.க உப செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கண்டி ஜோர் ஈ டி கூரே பூங்காவில் ஆரம்பித்து வைத்தார்.

# மக்களின் பொருளாதார சுமையை குறைக்க அரசு நிவாரணம் வழங்க முன்வர வேண்டும்.



~ ரணில்~

சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும் அதே வேளை ஏனைய மக்களின் பொருளாதார சுமையைக் குறைக்கவும் நிவாரணங்கள் வழங்க வேண்டியது பொறுப்பு வாய்ந்த அரசின் கடைமையாகும் என்று எதிர் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உடுநுவர தேர்தல் தொகுதியில் உள்ள தவுலகல பகுதியில் நடைப்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது.

கடல்கோளால் பாதிக்கப்பட்ட நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டியது அரசின் பொறுப்பாகும். இதற்காக எம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்க தயாராகவே உள்ளோம். இப்பணியில் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

பொருளாதார சுமை நாட்டு மக்களை வாட்டி 'வதைக்கின்றது. மக்களின் வாழ்க்கைத் தரம் நாளுக்கு நாள் பாதிப்புற்று செல்கின்றது. மூன்று மாதங்களுக்குள் வாழ்க்கை செலவு அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவோம் என்று ஆட்சிக்கு வந்தவர்கள் எதுவும் செய்யவில்லை.

தொடர்ச்சி 6 ம்பக்கம்..............

இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்க வெளியீடு

## வருட இறுதிக்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படா விட்டால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க வேண்டி வரும்.



ஜனாதிபதி தேர்தலை இவ்வருட இறுதியில் நடத்துவதாக அறிவித்திருந்த ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அதனை மறந்து மேலும் ஒரு வருடத்துக்கு அரசியல் அமைப்புக்கு முரணாக பதவியில் நீடிக்க முயற்சிப்பதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் முன்னால் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இதனை தெரிவித்தார்.

**பேராசிரியர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-**

மக்கள் ஆணையைப் பெறும் ஒரு ஜனாதிபதியால் ஆறு வருட காலங்களுக்கு மேல் அதிகாரத்தில் இருக்க முடியாது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி திருமதி குமாரதுங்க இந்தியாவின் பிரபல நாளேடான "இந்து" பத்திரிகையின் கொழும்பு நிருபர் வி.எஸ்.சம்பந்தனுக்கு அளித்த பேட்டியொன்றின் போது 2005 இறுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என உறுதிப்பட தெரிவித்தார். ஆனால், இன்று அவர் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு 2006 ம் ஆண்டு இறுதி வரை பதவியில் நீடிக்கத் தயாராகி வருகின்றார். அவரது மனநிலை ஏன் இவ்வாறு மாறியதோ தெரியவில்லை. இதற்கு அவர் பதிலளிக்க வேண்டும்.

**மக்கள் ஆணையைப் பெறும் ஒரு ஜனாதிபதியால் ஆறு வருட காலங்களுக்கு மேல் அதிகாரத்தில் இருக்க முடியாது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி திருமதி குமாரதுங்க இந்தியாவின் பிரபல நாளேடான "இந்து" பத்திரிகையின் கொழும்பு நிருபர் வி.எஸ்.சம்மந்தனுக்கு அளித்த பேட்டியொன்றின் போது 2005 இறுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என உறுதிப்பட தெரிவித்தார். ஆனால், இன்று அவர் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு 2006 ம் ஆண்டு இறுதி வரை பதவியில் நீடிக்கத் தயாராகி வருகின்றார். அவரது மனநிலை ஏன் இவ்வாறு மாறியதோ தெரியவில்லை. இதற்கு அவர் பதிலளிக்க வேண்டும்.**

உலகில் எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் இரகசியமாக தலைவர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதாக வரலாறே கிடையாது. இது ஒரு ஜனநாயக விரோத செயலாகும்.

ஜனாதிபதியின் தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்க 1975 இல் மேற்கொண்டதையே இன்று ஜனாதிபதி செய்ய முற்படுகின்றார். 1975 இல் நடக்க வேண்டிய பொதுத் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு பின் 1977 இல் நடத்தினார். அதன் விளைவு அவரது கட்சி தேர்தலின் பிரதான எதிர் கட்சியாக கூட வரமுடியாத அளவுக்கு மக்களால் நிராகரிக்கப்பட்டது. இதே நிலைமையை சுதந்திர முன்னணியும் எதிர்கொள்ள எதிர்பார்கிறார்களோ தெரியாது.

எவ்வாறானாலும் ஜனாதிபதியோ அவரது அரசாங்கமோ ஜனநாயக விரோதமாகவோ அரசியல் அமைப்புக்கு முரணாகவோ ஜனாதிபதி பதவியில் தொடர ஜனநாயக கட்சி என்ற அடிப்படையில் இடமளிக்கவே மாட்டோம்.

எதிர் வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதிக்குப் பின்னர் ஒருநாள் கூட அதிகாரத்தில் தொடர இடமளியோம். இவ்வாறு சட்டத்தை மீறி பதவி தொடர முயன்றால் அதன் விளைவுகளும் மிக பாரதூரமானவையாகவே அமையலாம் என்பதை எச்சரித்து வைக்கின்றோம்.

## டெமேரியா தோட்ட காரியாலயம் மூடப்படமாட்டாது

டெமேரியா தோட்ட காரியாலயம் ஒப்டன் தோட்ட காரியாலயத்தோடு இணைக்கப்பட போவதாக கிடைத்த தகவல்களை அடுத்து எமது பசறை மாவட்ட தொழிலுறவு அதிகாரி திரு.எஸ்.சதாசிவம் தனது கடும் ஆட்சேபனையை தோட்ட அதிகாரிக்கு எழுத்து மூலம் தெரிவித்துள்ளார்.

ஒப்டன் தோட்டத்திற்கும் டெமேரியா தோட்டத்திற்கும் இடையில் 10 மைல் தூரத்திற்கு மேலாக உள்ளது. இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் எனவும், எக்காரணம் கொண்டும் டெமேரியாத் தோட்ட காரியாலயம் ஒப்டன் தோட்டத்திற்கு மாற்றப்படுவது அனுமதிக்க முடியாத ஒன்று எனவும் திரு.எஸ். சதாசிவம் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அப்புகஸ்தன தோட்டங்களுக்கான குரூப் அதிகாரி கே.ஏ.கெட்டியாராட்சி இக்காரியாலயம் எக்காரணம் கொண்டும் மாற்றப்பட மாட்டாது என எழுத்து மூலம் உறுதியளித்துள்ளார்.

## குமாரவத்தை தோட்ட தொழிலாளருக்கு ரூபா. 19,83,783.50 தொகை நிலுவைச்சம்பளம் வழங்கப்பட்டது

மொணராகலை குமாரவத்தை தோட்டம் ஜனவசம பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் நிர்வகிக்கின்ற ஒரு தோட்டமாகும். ஜனவசம தொழிற்சங்கங்களோடு செய்து கொண்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க இத்தோட்ட நிர்வாகம் கடப்பட்டுள்ளது.

கடந்த யூன்- டிசம்பர் மாதம் வரை செலுத்தப்பட வேண்டிய அதிகரித்த சம்பள உயர்வான ரூபா. 19,83,783.50 தொகை தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனவரி மாதத்தில் வழங்குவதாக ஜனவசம சம்மதித் திருந்தது.

ஆனால், ஜனவரி மாதம் சம்பளத்துடன் வழங்கப்படாததை எதிர்த்து தொழிலாளர்கள் வேலை மறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தார்கள். அப்பொழுது ஜனவரி மாதத்தில் இத்தொகையை ரூபா 9,91,891.75 ஆக வழங்குவதாகவும் மீதி பணத்தை ஜனவரி மாதத்தின் கடைசியில் வழங்குவதாகவும் ஒப்புதல் அளித்ததில் வேலை நிறுத்தத்தை கைவிட்டார்கள்.

ஆனால், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமையால் மீண்டும் பெப்ரவரி மாதம் தோட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டார்கள்.

இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை மொணராகலை தொழில் ஆணையாளர் காரியாலயத்தில் நடைபெற்றது. தொழில் ஆணையாளர் திரு.ஆர்.எம்.ரட்நாயக்க தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்க தொழிலுறவு அதிகாரி திரு.எஸ்.சதாசிவம் தொழிலாளர் சார்பில் கலந்து கொண்டு இந்நிலுவை சம்பளத்தை பெற்று கொடுப்பதற்கு கடுமையான பிராயசித்தங்களை மேற்கொண்டார். அதன் பலனாக சகல தொழிலாளர்களுக்கும் மிகுதி கொடுப்பனவான ரூபா 9,91,891.75 எனும் தொகை வழங்கப்பட்டது. இப்பேச்சுவார்த்தையில் தோட்ட நிர்வாகத்தில் திரு.சுரேஸ் பெரேரா கலந்துக் கொண்டார். அப்பேச்சுவார்த்தையில் வேறு தொழிற் சங்கங்கள் கலந்து கொள்ளவில்லை.

## போகொல்லகம வழக்குத் தீர்ப்பு குறித்து ஐ.தே.க விடுத்திருக்கும் அறிக்கை

**அமைச்சர் ரோகித்த போகொல்லகம தொடுத்த வழக்கின் மீது உயர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை வழங்கிய தீர்ப்பு தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி அதன் நிலையை தெளிவுப்படுத்தி அறிக்கையொன்றை விடுத்திருக்கின்றது.**

**உயர் நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பில் கட்சியால் திருப்தி கொள்ள முடியாமைக்கான மூன்று காரணங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.**

**இலங்கையின் தேர்தல் முறையின் அடிப்படை விகிதாசாரப் பிரதிநிதித்துவமாகும். இந்த முறையின் முக்கியமான அம்சம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளை கட்சியே முன் வைக்கின்றது.**

வாக்காளர்கள் முதலில் தாம் தேர்ந்தெடுக்கும் கட்சிக்கே வாக்களிப்பர். அதன் பின்னரே அக்கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் நபர்களுக்கான விருப்பு வாக்கு அளிக்கப்படும். இதன்படி தெரிவாகும் உறுப்பினர் அவர் சார்ந்த கட்சியின் கொள்கைக்கும், கட்சித் தலைமைக்கும் விசுவாசமுள்ளவராகவும், கட்டுப்பட்டவராகவும் இருக்க வேண்டும். மக்கள் தமது வாக்குகளை முதலில் கட்சிக்கு அளிப்பதன் அடிப்படை நோக்கமே இதுவாகும்.

நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் இந்த தேர்தல் முறையின் அடிப்படை அம்சம் உயர் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் அரசியலமைப்பின் விதிகள் புறக் கணிக்கப்பட்பட்டுள்ளதையே காட்டுகின்றது.

போகொல்லகம தொடர்பு பட்ட விடயத்தில் உண்மைகள் தெளிவாக இருக்கும் நிலையில் விளக்கம் கோருவது தேவையற்றது என்பது தெளிவாகவே அறிந்து கொள்ள முடிகின்றது.

ஐ.தே.க. மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் கட்சிக்குக் கூறாமலேயே தான் நின்ற தளத்தைத் தாண்டி அரச தரப்பில் தனது ஆசனத்தை எடுத்துக் கொண்டுள்ளார். அது மட்டுமின்றி, தாம் தெரிவான கட்சிக்கு அறிவிக்காமல் எதிர்தரப்பு அரசில் அமைச்சர் பதவியொன்றையும் ஏற்றுள்ளார். அதேவேளை, பாராளுமன்றத்தில் தன் கட்சி எடுக்கும் முடிவுகளுக்கு எதிராக அரசு தரப்பில் வாக்களித்துமிருக்கின்றார்.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளும்போது, அவர் கட்சிக் கட்டுப்பாட்டை மோசமாக மீறியிருக்கின்றார் என்பதை மறுக்க முடியுமா? இதை விடவும் கட்டுப்பாட்டை மீறக் கூடிய சம்பவங்கள் வேறு கிடையாது.

இந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றம் உள்வாங்கியிருக்கும் விடயங்கள் உண்மை நிலைக்கு முற்றிலும் முரணானதாகும்.

ஐ.தே.க வின் யாப்பின் 3.4 (Y) பிரிவுக்கமைய சில விடயங்களில் "அந்த கருத்துக்கமைய மட்டும்" கட்சி உறுப்புரிமையை இழக்கச் செய்ய முடியும். இதில் ஒரு அம்ச கட்சியின் செயற்குழுவின் அனுமதியின்றி எதிர்தரப்பு அரசொன்றில் பதவியொன்றை ஏற்றுக் கொள்வதாகும். செயற்குழு முன்னிலையில் சமூகமளித்து விளக்கம் கூற நல்ல சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும், அவர் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவேயில்லை.

இதன்படி, இந்த பாராளுமன்ற உறுப்பினரின் சுயாதீனமான நடவடிக்கையை கவனத்தில் கொண்டு, கட்சி உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளும் போது உடன்படிக்கையாக அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்சி யாப்பின் பிரகாரம் அவர் உறுப்புரிமையை இழந்தவராகவே கருதப்படுகின்றார்.

**வாக்காளர்கள் முதலில் தாம் தேர்ந்தெடுக்கும் கட்சிக்கே வாக்களிப்பர். அதன் பின்னரே அக்கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் நபர்களுக்கான விருப்பு வாக்கு அளிக்கப்படும். இதன்படி தெரிவாகும் உறுப்பினர் அவர் சார்ந்த கட்சியின் கொள்கைக்கும், கட்சித் தலைமைக்கும் விசுவாசமுள்ளவராகவும், கட்டுப்பட்டவராகவும் இருக்க வேண்டும். மக்கள் தமது வாக்குகளை முதலில் கட்சிக்கு அளிப்பதன் அடிப்படை நோக்கமே இதுவாகும்.**

# ஊவாவில் பல்கலைக்கழகம் அமைவதை தடுப்பது மலையகக் கல்வி அபிவிருத்தியை அழிப்பதாகும்!

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொது செயலாளர் கருத்து.

பதுளையில் ஊவா பல்கலைக்கழகம் அமைவதை அரசியல் உள்நோக்கங்களுக்காக தடுக்கக்கூடாது. அது மலையகக் கல்வி அபிவிருத்தியையே குழிதோண்டி புதைப்பதற்கு சமமாகும். சுய விளம்பரம் தேடுவதற்காக தோட்டத் தொழிலாளர்களைப் பகடைக்காய்களாக்கக் கூடாது என எச்சரிக்கை விடுகின்றார் ஊவா மாகாண சபை உறுப்பினரும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான கே.வேலாயுதம்.

**இந்த விவகாரம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,**

ஊவா மாகாணத்தில் சகல வசதிகளும் கொண்ட பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென 1982 ம் ஆண்டிலேயே அத்திவாரம் இடப்பட்டது. அன்று மாகாண முதலமைச்சராகவும், கல்வி அமைச்சராகவும் இருந்த பேர்சி சமரவீர மத்திய அரசிடம் அப்போதே கோரிக்கை விடுத்திருந்தார். இருபத்து மூன்று வருடங்களின் பின்னர் இந்த கோரிக்கை செயலுருப் பெறுகின்றது. இதனை அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை விட்டு வரவேற்க வேண்டும்.

பதுளை மாநகர சபை எல்லைக்குள் அரச காணிகள் இல்லை. அதே வேளை வெள்ளவாய, மொணராகலை பிரதேசங்களில் அரச காணிகள் நிறையவே இருக்கின்றன. பதுளையில் அமைய வேண்டும் என்ற ஒரே காரணத்தினால்தான் பசறை அங்குரகமுவ தோ[illegible]த்தில் 25 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. கைவிடப்பட்டுள்ள நிலையில் இருக்கும் இத்தோட்டத்தில் ஏற்கனவே கைத்தொழில் பேட்டைக்காக 25 ஏக்கர் சுவீகரிக்கப்பட்டது.

இப்பொழுது அங்கு 35 குடும்பங்கள் மட்டுமே இருக்கின்றன. அங்கு பறிக்கப்படும் கொழுந்து கூட தனியார் தொழிற்சாலைகளுக்கே விற்கப்படுகின்றன. பெரும்பாலானவர்கள் வெளியிடங்களிலேயே தொழில் புரிகின்றனர். ஊவா பல்கலைக்கழக கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் போது அத்தோட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை வழங்கப்படுமென முதலமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இங்கு ஊவா பல்கலைக்கழகம் அமையும் போது விகிதாசாரப்படி தமிழ் மாணவர்கள் அனுமதியையும் அதேயளவு தொழில்சார், தொழில் சாரா நியமனங்களையும் தமிழர்கள் பெற முடியும். பல்கலைக்கழகத்தில் தமிழ் பாடநெறிகளையும் ஆரம்பிக்க முடியும். இவை அனைத்தும் நமது உரிமை. அதற்காகப் போராட்டமே நடத்தலாம்.

இப்பொழுது நாம் எதிர்ப்புத் தெரிவித்தால் ஊவா பல்கலைக்கழகம் வெள்ளவாயவிலோ அல்லது மொணராகலையிலோ அமைக்கப்படும். அப்போது அது தனிச் சிங்களப் பல்கலைக்கழகமாகவே அமையும். அதை எவராலும் தடுக்க முடியாது. இ[illegible]பல் மலையகக் கல்வி வளர்ச்சிக்கே ஆப்பு வைப்பதற்குச் சமமாக அமையும். எனவே, அரசியல்வாதிகள் தமது சுயலாபத்திற்காக தோட்டத் தொழிலாளர்களை பகடைக்காய்களாக்கி விடக்கூடாது என வேலாயுதம் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப்புலிகளை கனடா அரசாங்கம் தடை செய்யாது!

கனடாவின் எதிர்கட்சியான கன்சவேவ் கட்சி விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்ய வேண்டுமென. கோரிக்கை விடுத்துள்ளது. அக்கோரிக்கையை கனடிய அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக அண்மையில் கனடிய பாராளுமன்றத்தில் அமைச்சு மீதான குழுநிலை வாதத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெட்ரிக் குரு கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பதிலளிக்கையில் அமெரிக்கா, நோர்வே உட்பட பல நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான எந்த நடவடிக்கைகளையும் கனடாவில் மேற்கொள்ள வேண்டாம் எனவும், அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கனடாவின் நிலைமையை மோசமடையச் செய்ய வேண்டாமென கேட்டுள்ளார்கள்.

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலுவாக்கி அதை தொடர்ந்தும் பேணுவதற்கு விடுதலைப் புலிகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு செயல்பட முடியாது. இலங்கையில் சமாதானத்தை பேணுவதற்கு நாம் உதவ வேண்டும். இந்நேரத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்வது எந்த விதமான நன்மையையும் பயக்கப் போவதில்லை என தான் முழுமையாகவும், உண்மையாகவும் உணர்வதாகக் கூறினார்.

# அதிகரிக்கும் வரவு செலவை கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டது.

வாழ்க்கைச் செலவு நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு சென்ற வண்ணமே இருக்கின்றது. அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாது பொது மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். உடனடியாக உயர்ந்து வரும் வாழ்க்கை செலவை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சுனாமி அனர்த்தத்தைக் காரணம் காட்டி வாழ்க்கைச் செலவு உயர்வை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. 1904ம் ஆண்டிலேயே என்றுமில்லாதவாறு வாழ்க்கை செலவு அதிகரித்துக் காணப்பட்டது. அதே போன்று ஜனவரி மாதமும் வாழ்க்கை செலவின் அதிகரிப்பு முன்னிலையில் இருந்ததை காண முடிகின்றது.

அதிகரித்து வரும் வாழ்க்கை செலவை கட்டுப்படுத்தி அத்தியாவசிய பொருட்களை குறைந்த விலையில் வினியோகம் செய்வோம் என கூறி ஆட்சி பொறுப்பை ஏற்ற சந்தான அரசாங்கம் மின்னல் வேகத்தில் உயர்ந்து செல்கின்ற வாழ்க்கை செலவை கட்டுப்படுத்தி மக்களுடைய வாழ்க்கையை இலகுப்படுத்த எந்தவிதமான உருப்படியான நடவடிக்கைகளிலும் ஈடுபட தவறிவிட்டது என்று குற்றம் சுமத்தினார்.

அரசாங்கம் வாழ்க்கை செலவை கட்டுப்படுத்த முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தவறும் பட்சத்தில் நாடு முழுவதுமான ரீதியில் வாழ்க்கை செலவு உயர்விற்கு எதிராக போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்கு ஐக்கிய தேசிய கட்சி தள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார். இன்று அரிசி, மா, மீன், பருப்பு, டின்மீன், முட்டை, பால், பால்மா போன்ற அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் பன்மடங்கு அதிகரித்து செல்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

சுனாமி அனர்த்தத்தைக் காரணம் காட்டி வாழ்க்கைச் செலவு உயர்வை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. 1904ம் ஆண்டிலேயே என்றுமில்லாதவாறு வாழ்க்கை செலவு அதிகரித்துக் காணப்பட்டது. அதே போன்று ஜனவரி மாதமும் வாழ்க்கை செலவின் அதிகரிப்பு முன்னிலையில் இருந்ததை காண முடிகின்றது.

# வேலை நீக்கம் செய்யப்படும் ஊழியருக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவில் பெரும் மாற்றங்கள்.

**ஊழியரொருவர் வேலை நீக்கம் செய்யப்படும் பட்சத்தில் அவருக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு தொடர்பான சட்ட மூலத்தின் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.**

**இச்சட்ட திருத்தங்களுக்கான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதையடுத்து இச்சட்டத் திருத்தம் எதிர்வரும் 14/03/2005 வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளது.**

இப்புதிய சட்டத்திருத்தங்களுக்கு அமைய வேலை நீக்கம் செய்யப்படும் ஒருவர் 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை நஷ்ட ஈடாக பெற வாய்ப்புள்ளது.

புதிய சட்ட திருத்தங்களுக்கு அமைய 25 வருடம் முதல் 34 வருடம் வரை வேலை புரிந்தோரை வேலையிலிருந்து நீக்கும் போது அவர்களுக்கு 48 மாத சம்பளம் நஷ்ட ஈடாக வழங்கப்படும். ஆனால் இத் தொகை ஆகக் கூடியது 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகவே இருக்கும்.

ஒரு வருடம் முதல் 5 வருடம் வரை வேலை புரிந்தோர் வேலை நீக்கம் செய்யப்படும் பட்சத்தில் அவர்களுக்கு நஷ்ட ஈடாக 12.5 மாத சம்பளம் வழங்கப்பட வேண்டும். 6 முதல் 14 வருடம் வேலை புரிந்தோருக்கு 23.5 மாத சம்பளம் நட்ட ஈடாக வழங்கப்பட வேண்டும். 15 முதல் 19 வருடம் வேலை புரிந்தோருக்கு 38 மாத சம்பளம் நஷ்ட ஈடாக வழங்கப்பட வேண்டும். 20 முதல் 24 வருடம் வேலை புரிந்தோருக்கு 43 மாத சம்பளம் நஷ்ட ஈடாக வழங்கப்பட வேண்டும்.

*இதே நேரம் வேலையற்றோருக்கான காப்புறுதியாக 12 மாத சம்பளம் வழங்கப்பட வேண்டும். இந்த காப்புறுதிக் தொகை வேலையற்றோர் நல காப்புறுதி திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.. இந்த காப்புறுதி திட்டத்துக்கான கட்டணம் ஊழியர் நம்பிக்கை நிதியிலிருந்து செலுத்தப் படும்.*

இதே நேரம வேலையற்றோருக்கான காப்புறுதியாக 12 மாத சம்பளம் வழங்கப்பட வேண்டும். இந்த காப்புறுதிக் தொகை வேலையற்றோர் நல காப்புறுதி திட்டத்தின் மூலம் வழங்கப்படும். இந்த காப்புறுதி திட்டத்துக்கான கட்டணம் ஊழியர் நம்பிக்கை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

## தைப்பொங்கல்..... 1ம் பக்க தொடர்ச்சி...

இறைச்சியாக்கி விற்பனை செய்யும் நிலையை சட்டபூர்வமாக தடை செய்ய வேண்டும். குறிப்பாக தைப்பொங்ல் தினத்தன்றும் அதற்கு மறுத்தினத்திலும் ஆடு மாடுகளை இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்யும் நிலை கண்டிப்பாக தடை செய்யப்பட வேண்டும். ஊவா மாகாண சபை இது விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.

கடந்த சபை அமர்வில் மனித உரிமை சம்பந்தமாக நான் உரையாற்றும் போது இச்சபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் மனித உரிமையை மீறி செயல்பட்டு இச்சபையில் பெரும் குழப்பத்தையே ஏற்படுத்தி விட்டனர். ஆனால், இன்று மிருகங்களின் உரிமை தொடர்பாக பேசும் போது அவர்கள் அமைதியாக இருந்ததோடு நான் சமர்பித்த பிரேரணைக்கும் பூரண ஆதரவை வழங்கியது பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இப்பிரேரணைக்கு சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் பூரணமான ஆதரவை வழங்க வேண்டும். பல்லின மதக் கோட்பாடுகளையும் வேறுப்பட்ட கலாசார செயல்பாடுகளையும் கொண்டுள்ள எமது நாட்டில் இந்து மக்களின் இக்கலாசார பண்பாடுகளை ஊர்ஜிதம் செய்து காப்பாற்ற வேண்டியது அரசினதும் மாற்று சமூகத்தினதும் கடமையாகும் எனவும் குறிப்பிட்டார்.

இப்பிரேரணை ஏகமனதாக எவ்வித திருத்தமும் இன்றி நிறைவேற்றியதுடன் இதை ஊவா மாகாண சபையின் அதிகாரங்களுக்கு உட்பட்ட சகல உள்ளூராட்சி பகுதிகளும் அமுல்படுத்த கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் சார்பில் உரையாற்றிய அமைச்சர் புத்ததாச உறுதியளித்தார்.

# பெருந்தோட்ட துறையில் பெண்களின் பங்கு

பெருந்தோட்ட துறை என்று கூறும்போதே நம் நினைவிற்கு வருபவர்கள் அங்கு தொழில் புரியும் பெண்களே தமது வாழ்க்கையை தோட்டத் தொழிலோடு முழுமையாக இணைத்துக் கொண்டவர்கள் இவர்கள்.

தோட்ட ஏழைப்பெண்கள் துயரம் கேளுங்கோ- அவர்
தொந்தரவைப் பாட்டுக்குள்ளே பாடி பாருங்கோ
வாட்டமான சோதரிகள் விரலைப் பாருங்கோ
அது வரிவரியா வெடிச்சிருக்கும் வங்கி ஒடிச்சிங்கோ.

தேவையான மாற்று திட்டங்களை முன்வைத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதில்லை பேச்சளவில் மட்டுமே இவ்வமைப்புக்களின் செயல்கள் முடிவுற்றுவிடுகின்றன.

இன்று பெரும் தோட்ட துறையை சார்ந்த பெண்களை எவர் ஒதுக்கி நடந்தாலும் அவர்களோடு நெருங்கி செயலாற்றுவது அவர்கள் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்களே இச்சங்கங்கள் இப்பெண்கள் மத்தியில் இருந்து பல்வேறு தலைமைதுவங்களை உறுவாக்க வேண்டும். தமது தொழிற்சங்கக் அலுவலகங்களில் பணியாற்ற பெருந்தோட்டதுறைச் சார்ந்த

**என்ற இந்த கிராமத்துப் பாட்டிலே இந்த விரல்களின் அவல நிலையைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் இந்த நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டி தரும் இப் பெண்களின் விரல்கள் அசைந்தால் இந்த நாட்டின் பொருளாதாரம் என்னும் இதயம் துடிக்கும் என்பதை இப் பெண்கள் அறிவதில்லை. இவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதை பலர் விரும்புவதுமில்லை. எனவே தோட்ட துறையை சீராக்கும் பெண்கள் தன் நிலை மறந்தவர்கள் முன்னிலையில் அறியாதவர்கள்.**

என்ற இந்த கிராமத்துப் பாட்டிலே இந்த விரல்களின் அவல நிலையைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் இந்த நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டி தரும் இப் பெண்களின் விரல்கள் அசைந்தால் இந்த நாட்டின் பொருளாதாரம் என்னும் இதயம் துடிக்கும் என்பதை இப் பெண்கள் அறிவதில்லை. இவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதை பலர் விரும்புவதுமில்லை. எனவே தோட்ட துறையை சீராக்கும் பெண்கள் தன் நிலை மறந்தவர்கள் முன்னிலையில் அறியாதவர்கள்.

சூரியனை ஒரு தொழிலாளி என்று கூறுவர். காலையில் உதித்து மாலையில் மறையும் வரை தனது கடமையை ஓயாது ஓய்வின்றி செய்கின்றான். பெருந்தோட்ட பெண்களும் ஓயாது ஓய்வின்றி தமது பொறுப்புக்களை செய்து கொண்டே இருக்கின்றார்கள். கள்ளம் கபடமற்ற, தொழிலிலே பற்றுக் கொண்ட இவர்கள் தமது பொறுப்புக்களை உதாசீனம் செய்வதில்லை தேயிலை செடி வாடுகின்றது என்று கவலை கொள்ளும் ஒரு தொழிலாளப் பெண் நான் வாடுகின்றேனே என்று கவலைப்படுவதில்லை இது தொழில் பக்தியா? பெருந் தன்மையா அல்லது செடிகளின் மீது கொண்ட அளவற்ற அன்பா? என்ற கோள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்ல அவர்களுக்கு தான் நேரமேது.

சூரியனோடே எழும்பி தம் பணியை தொடங்குவதே பெருந்தோட்ட பெண்களின் கடமை ஆகின்றது. கன்னி பெண்களாயின் தமது தாய் தந்தையருக்குச் செய்ய வேண்டிய பொறுப்புக்கள் குடும்ப பெண்களாயின் கணவனுக்கு தம் குழந்தைகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை செய்ய அவர்கள் தவறுவதில்லை தமது குழந்தைக்களை பாடசாலைக்குச் செல்ல முன்னரே தமது தொழிலுக்கு செல்வதால் குழந்தைகளின் தேவைகளை கவனித்து அனுப்பும் பாக்கியம் இவர்களுக்கு கிடைப்பதில்லை மாலையிலே வீடு திரும்பும் போது கூட இவர்களால் முடிக்கப்பட வேண்டிய வீட்டு பணிகள் ஏராளாம் உள்ளன. அவற்றையும் பொறுமையுடன் சகிக்கும் தன்மை பெருந்தோட்ட பெண்களுக்கு எப்படித்தான் அமைகிறதோ?

தமது மாத வேதனம் எவ்வளவு கிடைக்கின்றது என்பதை பல தோட்ட பெண் அறியமாட்டாள் அதனையும் கணவனே வாங்கி விடுவான். ஊதாரியாக கணவன் அமைந்து விட்டால் அவள் படும் வேதனை சொல்லும் தரமன்று. லயன் அறைகளில் வாழ்ந்தாலும் அதுவே தான் குடியிருக்கும் வீடு என பெருமையுடன் கூறிக்கொண்டாலும் வரவேற்பறை, படுக்கை அறை, சமையலறை என்பன பெரும்பாலும் இல்லை. இருப்பினும் அவை முறையாக அமையவில்லை மிக குறைந்த சுகாதார வசதிகளே உள்ளன. இவற்றுக்கு முகங்கொடுத்தே பெருந்தோட்ட பெண் தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றாள். இவர்களது கல்வி அறிவு பூரணத்துவம் பெற்றதல்ல க.பொ.த (சா/த) சித்தியடைந்தோர் தொகை மிக குறைவு ஐந்தாம் தரத்தோடு தமது கல்வியை முடித்துக் கொண்டோர் பலர் க.பொ.த (உ/த) கல்வியைப் பெற்று சித்தியடைந்தோர் தொகையும் மிகவும் குறைவே.

எனவே வேறு தொழிலை எதிர்பார்க்காமல் கொழுந்து பறிக்கும் தொழிலையே மேற்கொள்கின்றனர் பெற்ற கல்வியை வாழ்க்கைத் தேவைக்குப் பயன்படுத்துவதாயின் வாசிக்கும் பழக்கமும் இவர்களிடையே காணப்படுவதில்லை. ஏனைய சமூகத்து பெண்களுடன் ஒப்பிடும் போது இவர்களது நிலை சமூக அந்தஸ்து அற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. பெருந்தோட்ட துறைப் பெண்களைப்பற்றி பேசும் சமூக நிறுவனங்கள் அமைப்புக்கள் இப் பெண்களின் மறுமலர்ச்சிக்கு

பெண்களையும் தெரிவு செய்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து அதன் மூலம் தெரிவு செய்யப்படுவோர் ஏனைய பெண்களை வழிநடத்தும் ஆற்றலைப் பெறுவர் தொழில் சம்பந்தப்பட்ட விடயங்களை நிர்வாகத்தோடு பேச்சு வார்த்தைகளில் பங்கேற்க செயல்படும் தன்மையையும் இவர்கள் பெறுவர். நாளடைவில் தொழில் நீதிமன்றங்களில் பேசும் ஆற்றலையும் இப்பெண்கள் பெறும் போது தம் இனப்பெண்கள் கனிவோடும் கருணையோடும் கவனித்து செயல்படும் போது பெருந்தோட்டப் பெண்களின் குரல் தொழில் மாற்றங்களில் ஒலிக்குமல்லவா?

இதையடுத்து தோட்ட மேற்பார்வையாளர், தோட்ட வெளிக்கள உத்தியோகத்தர் போன்ற பதவிகளுக்கும் இப்பெண்களை ஈடுபட செய்வதில் தொழிற்சங்கங்கள் அக்கறைக்கொள்ள வேண்டும். ஏனெனில் தேயிலை செடி சார்ந்த வேலைகள் அனைத்தும் முழுமையாக அறிந்தவர்கள் பெருந்தோட்ட பெண்கள் மட்டுமே. இதனை இ.தே.தோ.தொ.ச நடைமுறை படுத்தவுள்ளது.

இங்கு பெறப்படும் பயிற்சியின் மூலம் இப்பெண்களின் குரல் ஆரம்ப மட்டத்தில் பிரதேச சபை, மாகாண சபை என்பவற்றிலும் ஒலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இத்தகைய பதவிகளுக்கு தெரிவு செய்ய பெருந்தோட்டப் பகுதிகளில் தகுதியான பெண்கள் இல்லை என்று பலர் சொல்வதுண்டு ஆனாலும் இலைமறை காய்போன்ற செயலாற்றல் மிக்க பெண்கள் பலர் பெருந்தோட்ட துறையில் இருக்கின்றனர்.

இன்றைய இலங்கையின் சரித்திரத்திலே ஜனாதிபதி பிரதமமந்திரி அமைச்சர்கள் போன்ற பதவிகளை பெண்களில் பலர் அலங்கரித்துள்ளனர். இத்தகைய பதவிகளுக்கு தாமும் வர வேண்டும் என்பதல்ல இவற்றையெல்லாம் ஓர் உந்து சக்தியாகக் கொண்டு சிந்திக்க வேண்டும். எனவே, பெருந்தோட்ட துறையை சார்ந்த பெண்கள் சிந்திக்க வேண்டும். எனவே, பெருந்தோட்டத் துறையை சேர்ந்த பெண்களே சற்று சிந்தியுங்கள். செயலாற்றுங்கள்.

கடந்த பிரசுரத்தின் தொடர்ச்சி.......

# திராவிடர் திருமண சம்பிரதாயங்கள்

பிராயசித்தம்.

குற்றம் குறைகள் தீர்ப்பதற்காக பிராயசித்த ஓமமும் கிரியைகளின் நிறைவு பூரணாகதியும் நடைபெறும். தோழன் நெற் பொரியைப் பெற்று மணமகனின் கையில் கொடுக்க மணமகன் தான் பெற்ற பொரியை மணமகளின் கையில் கொடுத்து (மணமகள் அதனை இரண்டு கைகளாலும் ஏற்றுக் கொள்ள) மணமகன் மணமகளின் கைகளை தன் இரு கைகளாலும் தாங்கி குருக்கள் அக்கினியில் சிருக்ஸ்ருவம் (யாகக் குண்டத்தில் நெய் சொரிவதற்காக மரத்தால் செய்யப்பட்ட யாழி போன்ற முன் பகுதி உடையது) மூலம் நெய் சொரியும் போது அக்கினியில் இடுவர். "அக்கினி பகவானே சகல செல்வங்களையும் எமக்குத் தந்தருள வேண்டும்" என வேண்டுதல் செய்து (ஒரு நூலாசிரியர் சிறப்பாக நென் மலர் என்று வர்ணிக்கின்ற) நெற் பொரியைச் சொரிய வேண்டும்.

**அருந்ததி பார்த்தல்.**

கற்பு நெறியில் மிகச் சிறந்தவளாய் விளங்கியவள் அருந்ததி எனும் மங்கை. அவளின் சிறப்பினால் வானிலே நட்சத்திரமாக இன்றும் ஜொலித்துக் கொண்டிருக்கிறாள். பெண்ணின் கற்பு நெறி பெருமையை உணர்த்தவே அருந்ததி இருக்கும் திசை பார்த்து நமஸ்காரம் செய்வது மரபு. சில இடங்களில் அருந்ததிக்கென கும்பம் வைத்து கும்பத்திலே பூ போட்டு வணங்குவதுமுண்டு. இரவு வேளை எனின் வானில் நேரடியாகவே அருந்ததியைத் தரிசனம் செய்ய முடியும்.

"அண்டல மீதுலவும் அருந்ததி என்னும் அருந்திறற் கற்பினாள் உன்னைக் கண்டதால் ஊரு படவொணாதென்னக் கருதி நீ கங்குலிற் கவிகை கொண்டது முறை தான்" என்று புகழேந்திப் புலவர் பாடியது இத்தொடர்பில் ஒரு நூலாசிரியர் எடுத்துக் காட்டியிருக்கின்றார்.



**மோதிரம் அணிதல்.**

இது கிரியைகளிலே கூறப்படவில்லை. மணமக்களுக்கு கூச்சம் தெளியவும் சபை சிறப்புக்காகவும் செய்யப்படுகிறது. மஞ்சள் கலந்த நீரில் மோதிரமும் எலுமிச்சம்பழமும் போட்டு இருவரும் ஒரே சமயத்தில் கைவிட்டு எடுக்க வேண்டும். ஒருவர் மோதிரத்தை எடுத்தால் மற்றவர் வெறுங்கையை எடுக்கக் கூடாது என்பதற்காக எலுமிச்சம் பழம் சேர்த்துப் போடப்படுகின்றது. இம்முறை மூன்று தடவை நிகழும். மணமகன் மோதிரத்தை எடுத்தால் மறுதடவை பெண்ணுக்கு மோதிரம் எடுக்க விட்டுக் கொடுக்க வேண்டும். மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்ற தத்துவத்தை இது குறிக்கின்றது.

**அரசாணி.**

விவாகத்தில் நான்கு கும்பங்கள் நான்கு தீபங்களுக்கு மத்தியில் அரசாணி வைக்கப்படுகின்றது. அதுவும் முள்முருக்கமரம் நாட்டி முள்ளிருக்கும் பகுதியை வெள்ளைத் துணியால் மூடிக் கட்டி அவ்விடத்தே நடுவில் நாட்டப்படுகின்றது. விவாகத்தில் உள்ள கிரியைகள் மணமக்களின் கற்பு நெறியை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. இந்த அரசாணியின் தத்துவம் மணமகனை மட்டும் வலியுறுத்துவதாக அமைகிறது. தேவசபையில் இந்திரன் அகலிகையை விரும்பியதால் முனிவரின் சாபத்திற்கு உட்பட்டு உடல் முழுவதும் யோனி வடிவமாக ஆகும் படி சபிக்கப்பட்டான். பின் பிழையை உணர்ந்த இந்திரன் மன்னிப்புக் கேட்டு வேண்டிய பொழுது உடலில் யோனி உள்ள இடமெல்லாம் கண்களாக கடவது என சாபத்தைக் குறைத்தார். முள் மரம் முழுவதும் முள்ளிருக்கும். அம்முட்களை கண்களாக கருதி அதைத் துணியால் மூடி அவ்விடத்தே மணமகனுக்கு அதைத் தரிசிக்கச் செய்து கற்பு நெறி ஆணுக்கும் உண்டு அக்கற்பு நெறி தவறியதால் இந்திரன் சாபத்திற்கு உட்பட்டான். எனவே, கற்பு நெறி தவறாதிருக்க விவாகத்தில் இந்த வலியுறுத்தலும் முக்கியமாகக் கருதப்படுகின்[றது]. இதுவே, அரசாணியின் தத்துவமாகும்.

**வாழ்த்துதல் (அறுகரிசி போடுதல்)**

இந்த நிகழ்வு மணமக்கள் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டும் என பெரியோர்கள் மனமுவந்து ஆசீர்வதிப்பதாகும். அறுகானது நன்றாகப் பரவும் தன்மையும், இலகுவில் அழியாத தன்மையும் உடையதால் மணமக்கள் இருவரும் அதே தன்மையோடு சிறப்புற்று வாழ வேண்டும் என்ற நோக்கில் அறுகைச் சேர்த்து மஞ்சள் கலந்த அரிசி போடுதல் அறுகரிசியாக வாழ்த்துவது மரபாகும். இவ்வறுகு அரிசி போடுவதில் மாறுப்பட்ட தன்மையைக் காண முடியும். சிலர் கீழிருந்து மேல் நோக்கியும், சிலர் மேலிருந்து கீழ் நோக்கியும் ஆசிர்வதிப்பதுண்டு. இதில் சரியான முறை உச்சியில் (சிரசில்) மட்டும் மூன்று முறை இடுதலே ஆகும்.

நிறைவு-மகிழ்வு-வெற்றி குறித்துப் பண்டை நாளில் அறுகெடுத்து வாழ்த்தும் வழக்கம் இருந்து வந்தது. (சேக்கிழார் பெரிய புராணம் பாடி முடித்து யானை மீதமர்ந்து வீதியுலா வரும் போது ஆரணங்கள் விரித்தோதி மாமறையோர் எதிர் கொண்டு அறுகெடுப்ப வாழ்த்தெடுத்தார் (அரம்பையர்கள் எல்லாம் வணங்குதல் என்ற மரபு காலப்போக்கில் அறுகொடு நெல்லும் மலரும் கலந்திடுதல் என்று ஆயிற்று. நெல்லும் மலரும் கலந்து இட்டு வாழ்த்துதல் அட்சதையிடுல் என்று உலக வழக்கில் வழங்கக் காண்கின்றோம்.)

**ஆரத்தி எடுத்தல்.**

திருமண நிகழ்ச்சியின் நிறைவாக மணமக்களின் கைகளில் கட்டிய காப்புக்களை அவிழ்த்து வைத்து விட்டு பின் பவித்திரங்களைக் கழற்றி வெற்றிலையில் வைத்துக் குருக்களுக்கு தட்சணையும் சேர்த்துக் கொடுத்து மணமக்கள் ஆசிர்வாதம் பெறுவர். திருமணச் சடங்கின் முடிவில் ஆரத்தி எடுத்தல் இடம்பெறும். மணமக்களுக்கு "கண்ணூறு" (கண்திருஷ்டி) கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி அதன் மேல் மூன்று வாழைப்பழத்துண்டுகளில் நெய்தீபம் ஏற்றி இரு சுமங்கலிகள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக மூன்று முறை சுற்றி தீபத்தை அணைத்து மணமக்களுக்கு அக்குங்குமத்தை நெற்றியில் திலகமிட்டு விடுதல் நிகழும்.

ஆரத்தி எடுத்த பின் தோழன், மணமகன், மணமகள், தோழி என்ற வரிசையில் மங்கள மேளம் முழங்க எல்லோரும் வாழ்த்த வீட்டினுள்ளே வலது காலை எடுத்து வைத்து மணமக்கள் செல்வார்கள். அவர்களுக்கு முன்னே பூரண கும்பம், மங்கள தீபம் என்பவற்றை சுமங்கலிப் பெண்கள் கொண்டு செல்வர். வழிபாட்டறையில் அவற்றை வைத்து மணமக்கள் பெற்றோரின் ஆசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வீழ்வது நாமானாலும்! வாழ்வது தமிழாகட்டும்!

~சோமவன்ச~

# ஜனாதிபதி ஜே.வி.பி க்கு கடும் எச்சரிக்கை

# இணைந்து செயல்பட முடியாவிட்டால் அரசை விட்டு ஜே.வி.பி வெளியேறவும்!

## சுனாமி நிதி விடுதலைப் புலிகளுக்கு வழங்கினால் ஜே.வி.பி அரசில் இருந்து விலகும்

**ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணிக் "கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் அதன் பிரதான அங்கங்களான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் நாளாந்தம் எழும்பிய வண்ணம் காணப்பட்டு வந்தது. வித்தியாசமான அணுகுமுறைகளைக் கொண்ட இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட வெளிப்படைத் தன்மையற்ற, தூர நோக்கற்ற சுயநலவாத அரசியல் கட்சிகளோ அல்லது வேறு எந்த அவ்வகையான அமைப்புக்களோ ஒன்றிணையும் போது இவ்வாறு வேறுபாடுகள் தோன்றுவது சாதாரணமான ஒரு நிகழ்வே.**

பிரதான எதிர் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி அரசின் நிர்வாக செயல் முறைகளை கண்டித்தும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி தேர்தல் காலங்களில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி நாளாந்தம் அதிகரித்து வரும் மக்களது வாழக்கை சுமையை குறைக்க தவறி விட்டமையை சுட்டி காட்டியும் நாட்டின் வறுமை நிலையை அகற்றி நிரந்தர பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கு சமாதான பேச்சுக்களை முன்னெடுக்காமையை கண்டித்தும் அரசிற்கு எதிராக மக்கள் எழுச்சி போராட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளது.

ஆனால் இன்று ஜே.வி.பி க்கும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்குமிடையில் அல்லது ஜனாதிபதிக்கும் ஜே.வி.பி க்கு மிடையில் ஏற்பட்டிருக்கின்ற முறுகல் நிலை "சந்தான கூட்டாட்சியில்" பாரிய பின்னடைவை தோற்றுவித்துள்ளது. நாளாந்தம் வியாபித்து வரும் முறுகல் நிலை எந்நேரத்திலும் வெடித்து சிதறலாம்.

"தன்னுடைய அரசாங்கத்தில் இணைந்து செயல்பட முடியாதவர்கள் யாராக இருந்தாலும் அரசை விட்டு வெளியேறலாம்" என ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் [illegible]துக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் கடுமையாக எச்சரித்ததன் பின்னரே இந்த முறுகல் நிலை வலுவடைந்து வருகின்றது.

கூட்டரசாங்கத்தில் 39 பாராளுமன்ற ஆசனங்களுடன் அரசின் ஒரு பிரதான பங்காளியாக இயங்கி வரும் மார்க்ஸிஸ்ட் வாதிகளாக தங்களை சித்தரிக்க முனையும் ஜே.வி.பி. அமைச்சரவையில் அரசுக்கு ஆதரவான ஒரு முகத்தையும் அதற்கு வெளியில் பொது மக்களிடம் அரசுக்கு எதிரான கபட முகம் ஒன்றையும் காட்டி வருகின்றது.

அரசாங்கத்தால் அதன் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுகின்ற சகல சட்டத் திருத்தங்களுக்கும் சட்டவாக்கங்களுக்கும் எந்தவித எதிர்ப்புமின்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இரு கரங்களையும் உயர்த்தி ஆதரவு தெரிவித்து வருவதனை மக்கள் ந[illegible]ிவார்கள்.

அன்று ஐக்கிய தேசிய கட்சி முன்னனியின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு முன்மொழிந்த தொழிலாளர் தொழில் இழப்பு நட்ட ஈட்டுச் சட்டத்திற்கு முழுமையான எதிர்ப்பைத் தெரிவித்து பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் பல விதமான போராட்டங்களை மேற்கொண்டு தொழில் திணைக்களத்தினுள் பலாத்காரமாக புகுந்து அந்நகலை கிழித்தெறிந்து தீவைத்ததுடன் தங்கள் கடைசி மூச்சிருக்கும் வரையிலும் இச்சட்டத்தை அனுமதிக்க மாட்டோம் என ஜே.வி.பி யினர் அருதியிட்டுக் கூறினார்கள். ஆனால், இன்று நடப்பதென்ன? தொழிலாளர் வேலையிழப்பு நட்ட ஈடு வழங்கும் சூத்திரத்தை யார் எதிர்த்தாலும் கட்டாயம் அமுல் நடத்தியே தீருவேன் என சூளுரைத்து தொழிலமைச்சர் அத்தாவுட செனவிரட்ன அமைச்சரவையில் சில திருத்தங்களுடன் நட்டஈடு வழங்கும் ஏற்பாடுகளுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார். அதற்கு ஜே.வி.பி அமைச்சர்களும் வாய் திறக்காமல் கையுயர்த்தியுள்ளார்கள்.

நீரூற்றுக்கள், நீர்நிலைகள், நீர் வளங்கள் அனைத்தையும் தனியார் மயப்படுத்த அன்றைய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அன்று போர்க் கொடி தூக்கிய ஜே.வி.பி இன்று அமைச்சரவையில் தேசிய நீர் நிலைகள், 'நீர் வளங்கள் அனைத்தையும் தனியார் மயப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து



வருவதை கண்டும் காணாமலும் இருந்து கொண்டு அதற்கு ஆதரவு வழங்கி வருவதை என்னென்று கூறுவது? ஆட்சியில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற பதவி மோகமா? அல்லது மக்களை அடமானம் வைக்கின்ற துரோகச் செயலா?

நிலைமை

இவ்வாறிருக்க, ஜே.வி.பி. இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களையும், அமைச்சர்களையும், ஜனாதிபதியையும் ஒட்டு மொத்தத்தில் அரசாங்கத்தையும் கடுமையாக விமர்சித்தும் அவர்கள் மீது அவதூறு கூறியும் தங்களை ஆட்சி பீடம் ஏற்றிய மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது, மக்கள் மீது மேலும் மேலும் சுமையை ஏற்றி நாட்டின் பொருளாதாரத்தை நலிவடையும் நிலைக்கு உருவாக்கி வருகின்றார்கள். இவர்களின் இந்த இரட்டை வேடம் யாரை ஏமாற்றுவதற்கு இவற்றைக் கண்டு ஏமாறக் கூடிய நிலையில் எமது மக்கள் இன்று இல்லை என்பதை ஜே.வி.பி உணர்ந்து கொண்டால் போதும்.

1970 களில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பலியாவதற்கும் நாட்டின் அரச நிர்வாகம் சீர்குலைவதற்கும் பல கோடி மதிப்புள்ள அரச தனியார் சொத்துக்கள் அழித்தொழிக்கப்படுவதற்கும் காரணமாக இருந்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினர், பயங்கரவாதத்தையும், துப்பாக்கி கலாசாரத்தையும் இங்கு அறிமுகப்படுத்தியவர்களும் இவர்களே.

அதிகார ஆசையால் தங்கள் அரசியல் இருப்புக்களை பலப்படுத்திக் கொள்ள அப்பாவி பொதுமக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டிவிட்டு அவர்களை வேறுபடுத்தி நாட்டில் இன ஒடுக்கல் கொள்கைகளை மேலோங்கச் செய்து இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்கி பல உயிர்களையும், உடமைகளையும் காவு கொடுத்து தங்கள் அதிகார வெறியை தீர்த்துக் கொண்டு, நாட்டை இரண்டு படுத்தி, அவர்களை பன்நாட்டு அரசுகளிடம் கடனாளிகளாகவும், சர்வதேசத்தில் தங்கி வாழும் ஒரு சமூகமாக மாற்றிய, பல அரசியல் கட்சிகளும், அதன் தலைமைகளும், இன்று தங்கள் தவறை உணர்ந்து அதற்கு அதிகார மக்கள் விடுதலை முன்னனி மாத்திரம் "வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்" ஏறிய கதையை ஞாபகப்படுத்தும் வகையில் பிற்போக்குத் தனமாக செயல்பட்டு வருகின்றது.

எம் மத்தியில் காணப்பட்ட இன முரண்பாட்டின் விளைவாக உருவான உள்நாட்டு யுத்தத்தின் மூலம் பல அழிவுகளையும் இழப்புகளையும் கடந்த 20 ஆண்டுகளாக நாம் சந்தித்து வந்திருக்கின்றோம். அவற்றைப் பாடமாகக் கொண்டு சிறுபான்மை தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கக் கூடிய ரீதியில் சமஸ்டி முறையினூடாக அதிகாரங்களை பரவலாக்கி, ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப மக்கள் விடுதலை முன்னணி ஆதரவு வழங்க வேண்டும். இனறேல் இனவாதத்தின் மூலம் அரசியல் நடத்த முயன்று இருந்த இடம் தெரியாமல் போன பலருக்கு நடந்த நிலைதான் மக்கள் விடுதலை முன்னணிக்கும் நடக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

இனவாதத்தை தூண்டி விடுவதன் மூலம் நாடு மேலும் பிளவுபடுமேயன்றி ஐக்கியப்பட முடியாது. இந்த உண்மையை உணர்ந்து நாட்டின் பொருளாதார உயர்விற்கும் நிரந்தர இனப்பிரச்சினை தீர்வைக் காண்பதற்கும் மக்கள் விடுதலை முன்னணியினர் கை கொடுக்க வேண்டுமென்பதே நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் ஏன் அவர்களுக்கும் உகந்த ஒன்றாகும்.

பிரதான எதிர் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி அரசின் நிர்வாக செயல் முறைகளை கண்டித்தும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் காலங்களில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி நாளாந்தம் அதிகரித்து வரும் மக்களது வாழ்க்கை சுமையை குறைக்க தவறி விட்டமையை சுட்டி காட்டியும் நாட்டின் வறுமை நிலையை அகற்றி நிரந்தர பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கு சமாதான பேச்சுக்களை முன்னெடுக்காமையை கண்டித்தும் அரசிற்கு எதிராக மக்கள் எழுச்சி போராட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படுகின்ற பொருளாதார அபிவிருத்தி, அரசியல் ஸ்திரத் தன்மை போன்ற செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கு ஜே.வி.பி யின் செயற்பாடு தடைக்கல்லாக அமைந்து வருவதாகவும், 'தோளில் அமர்ந்து கொண்டு காதைக் கடிக்கின்ற' செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டு வருவதாக ஜனாதிபதி பலமுறை சுட்டிக்காட்டி வந்திருக்கின்றார்.

பொறுமைக்கும் எல்லையுண்டு என்பதைப் போல் மக்கள் விடுதலை முன்னணியின் தொடர்ச்சியான அரசு மீதான விமர்சனங்களால் பொறுமை இழந்த ஜனாதிபதி பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தங்களோடு இணைந்து பங்காற்ற முடியாதவர்கள் அரசை விட்டு வெளியேறலாம் என்று கூறியிருக்கின்றார். நேரடியாக மக்கள் விடுதலை முன்னணி என்று ஜனாதிபதி குறிப்பிடாவிட்டாலும் அவரது உரையை கேட்டவர்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியினரையே அவர் குறிப்பிட்டிருப்பது நன்கு புலப்படும்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற தொடர்புகளையும், தமிழ் ஈழ விடுதலை புலிகளால் முன்மொழியப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை சம்பந்தமான கோரிக்கையை இட்டும் விடுதலை புலிகளோடு அரசு பேச்சு வார்த்தை நடத்தக் கூடாது என ஜே.வி.பி அரசை எச்சரித்து வருகின்றது. அதே வேளையில் நாட்டில் தோன்றியுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனின், அரசு விடுதலை புலிகளோடு தான் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் இதுவே யதார்த்தமானதுமாகும்.

இதனையே நாட்டில் ஜே.வி.பி மற்றும் கெல உறுமய என்ற அரசியல் கட்சிகள் தவிர்த்த ஏனைய அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் வர்த்தக சமூகங்களும் கூறி வருகின்றன. அத்துடன் பன்னாட்டு அரசாங்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் சர்வதேச சமூகங்களினதும் நிலைப்பாடும் இவையேயாகும்.

அதே வேளை சமாதான பேச்சுகளை காத்திரமான ரீதியில் விடுதலைப் புலிகளோடு நடத்தினால் மாத்திரமே வெளிநாட்டு நிதி வழங்கப்படும் என சர்வதேச நிதி வழங்கும் நாடுகள் நியமம் பிறப்பித்துள்ளனர்.



எமது நாட்டை உலுக்கிய சுனாமி பேரலையால் கடற்கரை பிரதேசங்களில் சகஜ வாழ்வு முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இப் பகுதிகளில் மீள் கட்டுமான, புணர்நிர்மான வேலைகளை மேற் கொள்வதற்கு தேவையான நிதியை வழங்கு வதில் சர்வதேச சமூகம் விடுதலைப புலிகளையும் இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

தமிழ் ஈழ விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தன்னை கொலை செய்ய முயற்சித்ததை விட, இவர்களிடம் இருந்து (ஜே.வி.பி) எனது உயிரைக் காப்பாற்றி கொள்வதே இன்று எனக்கு கஷ்டமான காரியமாக இருக்கின்றது என ஜனாதிபதி அவர்கள் குறை கூறியுள்ளார்கள்.

இவ்வாறான சூழலுக்கு மத்தியில்தான் ஜனாதிபதி அவர்கள் பெப்பரவரி 13ம் திகதி ஞாயிற்று கிழமை நிட்டம்புவயில் உறையாற்றுகையில ஜே.வி.பி பற்றி யதார்த்த ரீதியாக குறிப்பிடுகையில் மாக்ஸிஸ்ட் வாதிகள் கூட்டணியை விட்டு வெளியேரலாம் என குறிப்பிட்டிருந்தார்.

மீண்டும் ஒரு தேர்தல் நடைப்பெற்றால் மக்கள் விடுதலை முன்னணி தனித்து போட்டி இட்டு தற்போது பெற்றிருக்கின்ற 39 ஆசனங்களில் நான்கில் ஒரு பங்கையாவது தக்க வைத்துக்கொள்ள முடியாது, என்ற உண்மையை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி மாத்திரமன்றி, ஜனாதிபதி அவர்களும் கணக்கிட்டே வைத்தள்ளார்கள். அதனால் தான் விருப்பமில்லாவிட்டால் மாக்ஸிஸ்ட் வாதிகளைப் பார்த்து அரசை விட்டு வெளியேறுமாறு அழுத்தமாக ஜனாதிபதி இடித்துரைத்துள்ளார்.'

ஐக்கிய மக்கள் சுகந்திர முன்னணியும் சுதந்திர கட்சியையும் விட்டுவிட்டால் ஜனநாயக அரசியல் தங்களுக்கு கனவாக மாறிவடும். என்ற எண்ணத்தில் அரசாங்கத்தை விட்டு எவ்வாறான இக்கட்டான சூழ்நிலையிலும் தாமாக பிரிந்து போய்விடக் கூடாது என்பதில் ஜே.வி.பி யினர் உறுதியாக உள்ளனர்.

ஜனாதிபதி அவர்கள ஜே.வி.பி யினரின் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளாமல் தள்ளியிருக்கிறார்கள். தனித்துவமும், சமத்துவ நோக்கமும், தன்மானமும் கொண்ட எந்த ஒரு அரசியல் கட்சியும் இந்த கேவலமான உதாசீனத்தை பொருத்துக்கொண்டிருக்க மாட்டாது.

ஜனாதிபதியின் இந்த திடீர் அதிரடி நடவடிக்கையை சற்றேனும் நினைத்துக்கூட பார்க்காத ஜே.வி.பி யின் அமைச்சர் மங்கள சமரவீரவின் துணையுடன் ஜனாதிபதியுடன் ஏற்பட்டிருகின்ற முரண்பாட்டை களைத்து மிண்டும் உறவுகளை புதுபித்து கொள்ளும் செயல் முறைகளில் ஈடுபட்டுள்ளார். தங்கள் காதலை வழுப்படுத்திக் கொள்வதற்கான காய் நகர்தலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மக்கள் விடுதலை முன்னணியினர் எம்.மை ஒழுங்காக ஆட்சி நடத்த விடமாட்டார்கள். எங்களது அரசியல் பொருளாதார அபிவிருத்தி பயணத்தை அவர்களால் சகித்து கொள்ள முடியாது.

தானும் வாழாமல் மற்றவர்களையும் வாழவிடாது செயற்படுவதே அவர்களது நிலைப்பாடு எனவே நாம் புத்தி சாதுரியமாக செயல்படாவிட்டால் மக்கள் விடுதலை முன்னனி எமது கட்சியை விழுங்கிவிடும், என்பதை மறந்து விடக்கூடாது என்பதனையும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை இல்லாது ஒழித்து எமது அதிகார பீடத்தை அவர்கள் வசமாக்கிக் கொள்ளவே ஜே.வி.பி முணைந்து வருகின்றதென்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த நிலைப்பாடுகளுக்கு மத்தியில் ஜனாதிபதிக்கு நெருக்கம்மற்றவராக காணப்பட்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஸ அவர்களது கரத்தை பலப்படுத்தி அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக அவரை நிறுத்துவதற்கு தாங்களது பூரணமான ஆதரவை வழங்கப்போவதாக ஜே.வி.பி யினர் தெரிவித்துள்ளனர். அன்று மகிந்த ராஜபக்ஸ பிரதமராவதை முழுமையாக எதிர்த்த ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதி மீது தமக்குள்ள ஆத்திரத்தை தீர்த்து கொள்ள, கூட்டணி உருவாவதிற்கு முழுமையாக பங்காற்றிய அனுர பண்டார நாயக்கவை தொப் என கீழே போட்டு விட்டார்கள். இது ஜே.வி.பி யின் கைவந்த கலை.

**தார்மீக சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்!**

JAFFNA.



# இலங்கையின் பயிர்ச்செய்கை சம்பந்தமான சரித்திர சான்றுகள் ஆண்டுகள்!

1830 கோப்பி பயிர்ச் செய்கையின் ஆரம்பம்.

1840 மலை நாட்டில் கோப்பி பயிர்ச்செய்கையின் அபிவிருத்தி

1841 சேவை ஒப்பந்த சட்டத்தின் ஆரம்பம்

1880 தோட்ட சுகாதார சேவை சட்டத்தின் உருவாக்கம்

1883 தேயிலை பயிர் செய்கையின் அறிமுகம்

1893 கொழும்பு மாநகரசபை தொழிலாளர்களின் முதலாவது வேலை நிறுத்தம்.

1893 முதலாவது தொழிலாளர் சபையின் உதயம்

1896 சலவை தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்

1906 புகையிரத வேலை நிறுத்தம்

1920 புகையிரத /துறைமுக தொழிலாளர் சங்கம்

1922 முதலாவது தொழிற்சங்கத்தின் உதயம் (இலங்கை தொழிற்சங்கம்)

1923 பொது வேலை நிறுத்தம்

1927 துறைமுக ஊழியர் வேலை நிறுத்தம்.

1928 டெக்ஸி தொழிலாளர் மற்றும் வலது குறைந்த தொழிலாளர் வேலை நிறுத்தம்.

1929 டிரம் போக்குவரத்து சேவை வேலை நிறுத்தம் (இதில் பொலிஸ் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி 5 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்)

1929 லேக் அவுஸ் ஊழியர் வேலை நிறுத்தம்.

1931 டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகை ஊழியர் வேலை நிறுத்தம்.

1931 டொனமூர் கொமிசனும் சர்வஜன வாக்குரிமையும்.

1931-1947- பல தொழிற்சங்க சட்டங்களுக்கான காலிமுக அங்கீகாரம்

1933 வெள்ளவத்தை நெசவு தொழிலாளர் வேலை நிறுத்தம்

1933 லங்கா சமசமாஜ கட்சியின் உருவாக்கம்

1936 தொழிற்சங்க கூட்டு அதிகாரம் (முதலாவது பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்க இலங்கை முதலாளிமார் சம்மேளனம்)

1939 இந்திய தொழிலாளர்களை அவர்களது பதவியிலிருந்து விலக்கல்

1940 லங்கா சமசமாஜ கட்சி தடை செய்யப்பட்டமை.

1948 பிரஜாவுரிமை சட்டம் கொண்டு வரப்பட்டமை (இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டமை)

1958 இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஆரம்பம்

1958 தொழிலுறவு சட்டம் உருவாக்கப்பட்டமை

1963 சிரிமா சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடல்

1972 காணி சீர்திருத்த ஆணைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. (பெருந்தோட்டங்கள் தேசிய மயப்படுத்தப்பட்டது)

1978 இலங்கையின் அரசியல் திருத்தம் மாற்றப்பட்டமை

1978 அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறை ஆரம்பம்

1984 பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு சம்பள முறை ஏற்படுத்தப்படல் (இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபற்ற பேச்சுவார்த்தையின் பயனாக பெருந்தோட்ட துறை தொழிலாளர்களுக்கு ஆண் பெண் சம சம்பளம் வழங்கப்பட்டது)

1988 அரசியல் யாப்பின் 13 வது திருத்தச் சட்டம் கொண்டு வரப்படல்.

1988 மாகாண சபைகள் உருவாக்கம்

1992 அரச நிர்வாகத்தின் கீழ் இருந்த தேயிலைத் தோட்டங்கள் தனியாருக்கு மாற்றப்பட்டது.

# பெண்

செ.நிதர்ஷனி



"மாதருக்கு சுதந்திரம் உண்டு"
"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்ளுவதால்
அறிவிலோங்கி இவ்வையகம் தலைக்குமாம்"
"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா
பங்கை கைதலம் பார்த்தல்லவோ இந்த பாரிலிறங்க வாருமம்மா"

இன்று சமூகத்தில் பெண்களுக்கு எவ்வளவு தான் முன்னுரிமை கொடுத்தாலும் ஆண்களுக்கு சரிசமனாக போட்டியிட்டாலும் எங்கே ஒரு மூலையில் அநியாயங்களும் கொடுமைகளும் நடக்கதான் செய்கின்றது. ஒரு குடும்பத்தின் ஒளி விளக்கே பெண்கள் என்கின்றார்கள். ஆனால், சமுதாயத்திலும் சரி குடும்பத்திலும் சரி அவள் எதிர்நோக்கும் இன்னல்களை யாரும் அறியமாட்டார்கள். ஒரு பெண்ணின் மனது இன்னொரு பெண்ணுக்கு தான் தெரியும் என்பார்கள். இருந்தும் இன்று சில சந்தர்ப்பங்களில் பெண்களே பெண்களுக்கு எதிரியாக நிற்கும் போது வேறு பேச்சிற்கு இடம் ஏது? பெண்ணானவள் சிறுவயதிலேயே குடும்ப சுமையை சுமக்க தொடங்குகின்றாள் வீட்டின் பொருளாதார பிரச்சினை காரணமாக வேலைக்கு செல்ல வேண்டி ஏற்படும் போது எத்தனை பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது.

பெண்கள் பெண்ணாய் இருப்பதால் எதிர் நோக்கும் சவால்கள் எத்தனை பெண்கள் தான் சமூகத்தின் முதுகெலும்பு போன்றவர்கள் என்பார்கள். ஆனால் அவளை சமூகத்தில் தனியாக நின்று எதையும் செய்ய விடமாட்டார்கள் அப்படி அவள் எதிர்ப்புகளை மீறி தன்னால் எதையும் செய்ய முடியும், எந்த காரியத்தையும் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்து காட்டினால் அவளை சமூகம் கேவலமாக பார்க்கின்றது. இன்றைய நவநாகரீக யுகத்தில் எத்துறையை எடுத்துக் கொண்டாலு[illegible] ஆண்களோடு பெண்களின் பங்களிப்பு கட்டாயம் தேவைப்படுகின்றது. இதை புரிந்து கொள்ளாத சில மானிடர்கள் பெண்களை ஏன் இன்னும் பின்னிலைக்கே தள்ளுகின்றார்கள். பெண்களுக்கு சமூகத்தில் சமத்துவமான இடத்தை வழங்க வேண்டும் என்பதற்காக பல மாதர் சங்கங்கள் இன்னும் கோசம் எழுப்பிக் கொண்டுதான் இருக்கின்றன.

# ஜனவசம கூட்டுதாபன..... 1

தோட்டத்தில் தொழில் புரிவோரின் எண்ணிக்கை முன்னர் இருந்ததிலும் பார்க்க அரைவாசிக்கு மேலாக வீழ்ச்சிக்குள்ளாகியுள்ளது. கம்பனித் தோட்டங்களில் இன்று சுமார் 3,00,000 இற்கு குறைவானவர்களே தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

ஜனவசம மற்றும் கூட்டுதாபன நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்ற தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மாதாந்தம் குறிப்பிட்ட தினத்தில் வழங்கப்படுவதில்லை. தாமதமாகவே வழங்கப்படுகின்றது. கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 300 நாட்கள் வேலை வழங்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கு குறைந்தளவு வேலை நாட்களே வேலை வழங்கப்படுகின்றது. மேலும் அவர்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன மத்திய வங்கியில் வைப்பில் இடப்படவில்லை. இதனால் ஊழியர் நம்பிக்கை நிதியின் அங்கத்தவர்கள் அனுபவிக்கின்ற காப்புறுதி நலன்புரி சலுகைகளை இத்தொழிலாளர்கள் பெற முடியாத நிலையிலுள்ளார்கள். பல தொழிலாளர்கள் சேவையில் இருந்து ஓய்வு பெற்று நீண்ட நாட்களுக்கு மேலாகியும் கூட அவர்களது சேவைகாலப் பணம் இன்றுவரை வழங்கப்படாது உள்ளது.

தொழிலாளர்கள் வங்கியில் பெற்ற கடன் தொகையை மாதாந்தம் அவர்களது சம்பளத்தில் இருந்து கழித்திருந்தும் அவற்றை உரிய வங்கிகளுக்கு செலுத்தாமையினால் தொழிலாளர்கள் வங்கிக்கு இரட்டித்த வட்டிகளையும் செலுத்த பணிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவ்வாறே தொழிற்சங்க அங்கத்துவ சந்தாவையும் செலுத்தாது இருக்கின்றது.

மனிதவள அபிவிருத்தி நிதியத்தினூடாக ஏனைய தோட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற சுய வீடமைப்பு திட்டங்கள் இத்தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டு வந்துள்ளது. இதனால் இத்தோட்டங்களில் வேலை செய்கின்ற சுமார் 40,000 ற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் அவர்களில் தங்கி வாழ்கின்ற சுமார் 1,50,000 மக்களும் வறுமைக் கோட்டின் கீழ் தள்ளப்பட்டுள்ளார்கள்.

உலக மய பொருளாதாரத்தை எதிர்த்து நாம் தனித்து நின்று செயற்பட முடியாது என்பது யாவரும் அறிவர். அதற்காக தனியார் மயம் என்ற போர்வையில் நிர்வாக திறமையற்றவர்களுக்கும் தோட்ட அபிவிருத்திக்கு முதலீடு செய்ய முடியாதவர்களுக்கும், பெருந்தோட்ட விவசாயம் சம்பந்தமாக தெளிவற்றவர்களுக்கும் இத்தோட்டங்களைக் கையழித்து இம்மக்களது பிரச்சினைகளில் இருந்து அரசு தன்னை விடுவித்துக் கொள்ள நினைக்குமேயானால் அது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். எனவே, இத்தோட்டங்களை தனியார் மயப்படுத்துவதற்கு மு[illegible] தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சகல கொடுப்பனவுகளையும் வழங்கப்படுவதுடன் திறமையும், ஆற்றலும், அனுவபமும், வளமும் மிக்கவர்கள் இனங்காணப்பட வேண்டியது அவசியமாகும்.

இங்குள்ள இத்தொழிலாளர்களின் எதிர்கால அபிவிருத்தியை தீர்மானிக்கும் முகமாக தொழிற்சங்க நிர்வாக அரச பிரதிநிதிகள் உள்ளடக்கிய ஒரு உயர் மாநாட்டை கூட்டி முடிவெடுக்க வேண்டும் என எமது சங்கம் ஜனாதிபதி அவர்களை கேட்டுக் கொள்கின்றது.

மக்களி...1 ம் பக்க தொடர்ச்சி

எனவே, பொருளாதாரச் சுமையிலிருந்து மக்களை விடுவிக்க தேவையான நிவாரணங்களை வ்ழங்க அரசு முன் வரவேண்டும். நாடு சகல துறைகளிலும் கட்டி எழுப்பப்பட வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி மீதுள்ள மக்களின் நம்பிக்கை அழியப் போவதில்லை. நாட்டு மக்களுக்கு கூடுதல் சேவைகளை வழங்கிய கட்சி ஐக்கிய தேசிய கட்சியேயாகும். நாம் மக்களின் நலன் தொடர்பாக அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றோம் என்று கூறினார்.

இக்கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி பிரதி செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பாராளுமன்ற உறுப்பினர்களான கெகெலிய ரம்புக்வெல்ல, ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, ஏ.ஆர்.காதர், லக்ஷ்மன் கிரியெல்ல உட்பட பலரும் கலந்துக் கொண்டனர்.

முயற்சியை என்றும் நீ கைவிடாதே!

# கண்ணீர் அஞ்சலி



## கறுப்பையா தேவர்
# ஆவத்தாள் அம்மாள்

ஊவா மாகாண சபை உறுப்பினரும்,
இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க
பொதுச் செயலாளரும், பதுளை பவர் பவுன்டேசன்
நிறுவன ஸ்தாபகருமான
கௌரவ கறுப்பையா தேவர் வேலாயுதம் அவர்களின்
அன்புத் தாயார் ஆவத்தாள்
அம்மாள் அவர்கள் 06.03.2005 இல் தமிழ்நாடு
புதுக்கோட்டை மாவட்ட தாந்தானி
கிராமத்தில் இறைவனடி சேர்ந்து விட்டார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள்
07.03.2005 திங்கட்கிழமை காலை 11.00
மணிக்கு தாந்தானி கிராமத்தில் குடும்ப மயானத்தில்
நடைப்பெற்றது என்பதை
ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.

[illegible]படி துயரச் செய்தியை எமது அங்கத்தினர்களுக்கும் பொது மக்களுக்கும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க தலைவர், காரிய கமிட்டி அங்கத்தினர்கள், தோட்ட தலைவர் முதல் சங்க அங்கத்தினர்கள் அனைவரும் மிகவும் கவலையுடன் அறிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்கான அஞ்சலியை தோட்ட மக்கள் அவர்களின் தோட்ட கமிட்டிகள் மூலமாக நடத்தினர் என்பதையும் அறிவிக்கின்றனர்.

# பொகவந்தலாவையில் திடீர் தீ விபத்து! நாற்பதிற்கும் அதிகமான கடைகள் எரிந்து சாம்பலாயின!

பொவந்தலாவை நகரில் திடீரென மீன் கடை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தை தொடர்ந்து 47 கடைகளும் 4 வீடுகளும் முற்றாக எரிந்து சாம்பலாயின. இத்தீவிபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளார். பெப்ரவரி 16 ம் திகதி அதிகாலை 2.00 மணியளவில் ஏற்பட்ட இத்தீ விபத்தினால் பல கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் கருகி நாசமடைந்துள்ளன.

மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்ட இத்தீவிபத்தினால் நகரில், செல்வகந்தை வீதியின் இரு மருங்கிலும் இருந்த அனைத்து கடைகளும் எரிந்து சாம்பலாயின. இரவு ஆரம்பித்த தீ மறுநாள் பகல் வரை சுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்ததை காண முடிந்தது. கண்டி மாநகர சபையின் தீயணைப்பு படையினர் வரவழைக்கப்பட்ட பின்னரே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.


பொகவந்தலாவை நகருக்கு அருகிலுள்ள செல்வகந்தை, கொட்டியாகலை, ஆரியபுர பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து இத்தீயை அணைப்பதற்கு மிகவும் போராடினார்கள். ஆனால் அவர்களால் அவற்றை முற்றாக அணைக்க முடியவில்லை.

# பாதை புணரமைப்பு 13 இலட்சம் ரூபா ஒதுக்கீடு



ஊவாமாகாண சபையினால் பசறை பகுதியில் மூன்று பிரதான பாதைகளை புணரமைப்பதற்கென மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் செயலாளரும், ஐக்கிய தேசிய கட்சியின் பசறை தொகுதி அமைப்பாளருமான கே.வேலாயுதத்தின் வேண்டுகோளின் பேரில் 13 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க பசறை நகரிலிருந்து கிறிஸ்தவ தேவாலயத்திற்கு ஒன் வே பாதை புணரமைப்பு பணிக்காக 5 இலட்சம் ரூபாவும் மடுல்கஸ்தவாவ வித்தியாலய மாவத்தை பாதை புணரமைப்பு பணிக்காக 5 இலட்சம் ரூபாவும் இழுப்பதன்ன பாதை புணரமைப்பு பணிக்காக 3 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.



# 10 வருட காலத்துக்குப் பின் சேவை கால பணம் பெற்று கொடுக்கப்பட்டது

நானுஓயா மாவட்டத்தை சேர்ந்த சமர்செட் தோட்டம், தம்பகஸ்தலாவ டிவிசனை சேர்ந்த கணேசன் யோகேஸ்வரி என்பவர் தலவாக்கலை மட்டுகலை தோட்டத்தை சேர்ந்த துரைசாமி சுப்பரமணி என்பவரை 1991ம் ஆண்டு சட்ட ரீதியாக திருமணம் முடித்து 1993.05.31 இல் இவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதன் பின் குடும்ப வாழ்கையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டமையினால் துரைசாமி சுப்பரமணியம் நஞ்சு அருந்தி 04.03.1994 ஆம் ஆண்டு மரணித்தார்.

அவரின் மரணத்திற்கு பின் அவரின் தாயாருக்கும் அவரது மனைவிக்கும் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக மீண்டும் திருமதி. கணேசன் யோகேஸ்வரி தன் பெற்றோர்களின் வசிப்பிடமான தம்பகஸ்தலாவ டிவிசனுக்கு வந்து தொழில் செய்கின்றார். ஆனால் இறந்துபோன கணவரின் சேவைக்காலப் பணத்தை தோட்ட நிர்வாகம் வழங்க மறுத்து விட்டது.

அதன் பின் தோட்ட கமிட்டி தலைவர் திரு.கே.யோகரட்ணம் எமது நானுஓயா மாவட்ட காரியாலயத்திற்கு புகார் கொடுத்ததன் பயனாக எமது சங்கத்தின் பிரதிநிதி திரு.எம்.ஆறுமுகம் அவர்கள் தோட்ட நிர்வாகத்துக்கு பதிவு தபால் மூலம் பல கடிதங்களை எழுதியும் தோட்ட நிர்வாகம் எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.

இவ்விடயம் சம்பந்தமாக சங்கத்தின் மூலமாக அட்டன் உதவி தொழில் ஆனையாளரின் கவனத்திற்கு புகார் கொடுக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக 28.07.2004 தொழில் காரியாலயத்தில் விசாரணை நடத்தப்பட்டு அதன் பின் அட்டன் தொழில் அதிகாரி திரு.விமலசேன அவர்களுடன் தோட்ட காரியாலயத்துக்கு சென்று (மட்டு கெலை தோட்ட காரியாலயத்திற்கு சென்று) சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்த போது இறந்து போன துரைசாமி சுப்பரமணியம் என்றவரின் சேவைக் கால பணம் ரூபா 9,102/24 சதத்தை அவரின் தாயார் திருமதி.மாரியாய் 15.04.1996ம் ஆண்டு தோட்ட நிர்வாகத்திடமிருந்து பெற்றுக் கொண்டதாக உண்மை வெளியானது.

அன்றைய தினம் 06.08.2004 சங்கத்தின் மூலம் கேட்க்கொண்டதற்கிணங்க திருமதி.மாரியாயிற்கு வழங்கப்பட்ட சேவைகாலப் பணம் சட்ட ரீதியாக சுப்பரமணியத்தின் மனைவிக்கும் அவரது மகனுக்கும் 20.08.2004 முன்பதாக வழங்கப்பட வேண்டுமென தோட்ட நிர்வாகத்திடம் கோரப்பட்டது. மேலதிகமாக வழங்கப்பட்ட திகதியிலிருந்து 9,102/24வுடன் சேர்த்து ரூபா 11,832/91 சதம் சம்பந்தப்பட்ட யோகேஸ்வரிக்கும் அவரது மகனுக்கும் சம பாதியாக வழங்கப்பட வேண்டுமென தொழில் அதிகாரி உத்தரவிட்டார்.

எமது நானுஓயா மாவட்ட பிரதிநிதி திரு.எம்.ஆறுமுகத்தின் முயற்சியினால் திருமதி.யோகேஸ்வரிக்கும் அவரது மகனுக்கும் தலா ரூபா 5,932/40 சதம் படி 15.09.2004 அட்டன் உதவி தொழில் ஆணையாளரின் காரியாலயத்தில் காசோலை வழங்கப்பட்டது.

மேலும் அவ்விசாரணையின் போது எமது சங்கத்தின் சார்பில் நானுஓயா மாவட்ட பிரதிநிதி திரு.எம்.ஆறுமுகம் நுவரெலியா மாநில அமைப்பாளர் திரு.எஸ்.சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பொதுசன நூலகம்
24 MAR 2005
யாழ்ப்பாணம்.
PUBLIC LIBRARY
JAFFNA.



தேசிய முரசொலி

இல.60, பண்டாரநாயக்க மாவத்த, வெளிக்கட, ராஜகிரிய. தொலைபேசி இல.011-2865138,
பெக்ஸ் 011-2862262, Telegram LAWAKASA e.mail: ctucljeu@sri.lanka.net

## எமது எண்ணம்

# தோட்டத் தெழிலாளர்களின் அன்றாட உணவும் நாட்டின் அபிவிருத்தியும்.

**2004ம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஈழநாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருந்த வேளையில் எதிர்பாராத சுனாமி பேரலையினால் நாடே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானது. இவ்வனர்த்தத்தினால் நாற்பதாயிரத்திற்கும் அதிகமான உயிர்கள் பலியானது குறிப்பிடத்தக்கது.**

2004 ம் ஆண்டு இறுதிக்கட்ட பொருளாதாரம் அடிமட்ட நிலைக்கு தள்ளப்படடதனை சந்தான அரசே பொறுப்பெடுக்க வேண்டும். ஒழுங்காக திட்டமிடப்பட்ட நிர்வாகம் இல்லாமையினால் சந்தான அரசிடம் இல்லாமையே இதற்கு பிரதான காரணமாகும். இதனால் மக்கள் இன்று தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்ல பெரும் பாடுபட்டுக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்த ஒன்று.

ஆனால், சுனாமி பேரழிவு மக்களையும் அவர்களின் உயிர்களையும், உடமைகளையும் அழித்தது அரசாங்கத்திற்கு சாதகமாக அமைந்து விட்டது. இச்சுனாமி பேரனர்த்தமானது, சந்தான அரசு நாட்டினை நடத்த முடியாத நிலையிலிருந்து தன்னை மீட்டிக் கொள்வதற்கும், தனது இயலாமையை மறைத்துக் கொள்வதற்கும் கைக் கொடுத்துள்ளது. நாடு இப்பேரழிவனை சந்தித்து மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதனால் சர்வதேச ரீதியில் பரோபகார உதவி செய்யும் நாடுகள் பொருள், பணம் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்கள் மூலமாகவும் உதவிகள் செய்ததனால் இவ்வரசின் இயலாமை தன்மையை மறைத்து இன்று மார்தட்டி முன்னாள் வந்துள்ளது.

இந்நாட்டு மக்களும் தம்மால் இயன்ற பொருள், பண உதவிகளை செய்ததோடு மாத்திரமல்லாது தம் தேவைகளை அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள இச்சந்தர்ப்பத்தை பாவிக்காது விட்டுக் கொடுத்திருப்பதனையும் நாடறியும்.

நாட்டின் சுனாமி பேரழிவினால் அரசு தத்தளிப்பதை அறிந்த முக்கிய எதிர்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் பிரதி தலைவர் கரு ஜயசூரிய அவர்களும் தமது கட்சியை கூட்டி அதன் முழுமன ஒத்துழைப்புடன் இச்சந்தான அரசிற்கு முழுமையான ஒத்தாசையை அளித்தது மாத்திரமல்லாது, சுனாமியால் பாதிப்பிற்குள்ளான மக்களையும் அவர்களின் வீடு தேடி சென்று ஆறுதல் கூறியதோடு அனைத்து விதமான உதவிகளையும் அவர்களின் அன்பர்களையும் நண்பர்களையும் இணைத்து செயல்பட செய்தனர். அத்தோடு, பிற நாடுகளுக்கு சென்று அந்நாடுகளின் முக்கிய அரசியல் பிரமுகர்களை சந்தித்து எமது நாட்டிற்கு உடன் உதவி செய்ய நடவடிக்கை எடுத்ததை நாட்டு மக்கள் நன்றாக அறிவர்.

எதிர்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் உடன் நடவடிக்கையை ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரும் போற்றிப் புகழ்ந்ததோடு நாட்டு மக்களுக்கும் எதிர்கட்சியின் நடவடிக்கைகளை சிறப்பாக எடுத்துரைத்தார். இதேவேளையில் சந்திரிக்கா அம்மையார் தமது சந்தான அரசின் மிக முக்கிய பங்காளியான ஜே.வி.பி யினரை தூரத்தள்ளி வைத்ததும் இக்காலக்கட்டத்திலேயாகும்.

இன்று இவ்வரசின் நிலைப்பாட்டினை ஆழ்ந்து ஆராய்ந்தால் சந்திரிக்கா அம்மையாரின் நிலைப்பாடு எந்த முன்னேற்ற நடவடிக்கைகளையும் எடுக்காதது தெளிவாகின்றது. சந்திரிக்கா அம்மையார் அவர்கள் நாட்டினை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லாது தம் பதவியினை சிறிது காலம் நிலைகொள்ளச் செய்ய பிரயத்தனப்படுவதை நாம் அவரின் கூட்டறிக்கைகள் மூலமாகவும் மக்கள் மத்தியில் பிரச்சார மேடைகளில் கூறும் நுட்பமான பேச்சிலிருந்தும் தெளிவாக அறியலாம்.

இன்று நாட்டில் சுனாமியில் பாதிக்கப்பட்டு தங்க வீடின்றி அவதியுறும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களை மீள குடியேற்றங்களை அமைத்துக் கொடுத்து தங்க வைக்க வேண்டிய நிலைமையினை மறந்து அரசு செயல்படுவதை பார்க்கும் பொழுது இவ்வரசிற்கு கஸ்டப்படும் மக்களினை அக்கஸ்டத்திலிருந்து காப்பாற்ற எதுவித நடவடிக்கை எடுக்காது செயல்படுவதை மிகவும் கவலையாக குறிப்பிட வேண்டும்.

மக்களை ஏமாற்றுவதையே தம் வாழ்நாளில் குறிக்கோளாகக் கொண்டு அன்று தொடக்கம் இன்று வரை செயலாற்றி வரும் ஜனாதிபதி அவர்கள் இவ்வேளையிலும் பாதிப்பிற்குள்ளாகி பரிதவிக்கும் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்காது காலம் கடத்த தம்முடைய அன்பர்களையும் நண்பர்களையும் சேர்ந்த ஒரு கமிட்டியை அமைத்து அதன் மூலம் செயல்படுவதாக மக்களுக்கு பிரகடனப்படுத்தி காலம் கடத்தி வருவதனை காணும் பொழுது இவ்வரசாங்கத்திற்கு பணமும் பொருளும் உபதேசங்களும் உதவிகளும் கிடைத்தும் செயற்பட திட்டமில்லாமையையும், நோக்கமில்லாததையும், தேவையில்லாததையும் பார்க்கும் பொழுது மக்களை எவ்வளவு காலம் இதே நிலையில் ஏமாற்றப் போகிறார் என்ற கேள்வி இன்று பரவலாக எழுப்பப்படுகிறது.

இதன் அடிப்படையில் ஜனாதிபதி அவர்கள் இவ்வளவு பேராபத்து வந்தும் ஆயிரக்கணக்கான மக்களை பழிகொண்டு இருக்கும் வேளையிலும் நாட்டினையோ மக்களையோ கருத்திற் கொள்ளாது தம் அரச கட்டிலை மட்டும் காப்பாற்றிக் கொள்ளக் கங்கணம் கட்டி செயல்படுவது வெள்ளிடை மலையாக வெளியாகியுள்ளது. மக்கள் படும் கஸ்டத்தினை கருத்திற் கொள்ளாது செயல்படும் இவர்களின் நிலையை எந்த பதத்தில் கூறுவது?

இவ்வேளையில் இவ்வரசினால் பொது மக்களுக்கு செலவு சுமை கூடுவதை யாராலும் மறுக்க முடியாது. ஏனெனில் தண்ணீர் விலை உட்பட மாவின் சலுகையை நிறுத்தியதனால் மாவின் விலை அதிகரித்துள்ளது. அதே போல் மின்சாரம் மற்றும் எரிபொருள்களுக்கு கூடிய் சீக்கிரம் அதிகரித்த விலையை பெற அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அறிகின்றோம்.

இதனால் கூடியளவில் மாவை பாவிக்கும் தோட்ட தொழிலாளர்களுக்கு இவ்வரசிடமிருந்து சலுகை அடிப்படையில் மாவை வினியோகிக்குமாறு இவ்வரசிடம் எமது சங்கம் வேண்டுகோள் விடுத்திருப்பதும் அதன் அடிப்படையிலாகும்.

எம்முடைய சங்கம் தோட்டத் தெழிலாளர்களின் தொழில் பிரச்சினை மாத்திரமல்ல அவர்களின் வாழ்க்கை பிரச்சினையையும் உணவு, உறைவிடம் போன்ற எல்லா பிரச்சினைகளுக்கும் நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுப்பதனை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதனால் இச்சலுகையை இவ்வரசிடமிருந்து கேட்டுள்ளோம். ஆனால் எந்தவித திட்டமுமில்லாது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல கோடிக் கணக்கான நிவாரணம் கிடைத்தும் அதனை சரியான முறையில் செயல்படுத்தாத இவ்வரசாங்கம் எம்முடைய இச்சிறு கோரிக்கைக்கு செவி மடுக்குமா என்பதனை நாம் சந்தேகத்துடனே கவனிக்கின்றோம்.

இன்று இந்நாட்டிற்கு வெளிநாட்டு செலாவணியை அதிகளவில் தேடித்தரும் இலட்சக்கணக்கான தோட்ட தொழிலாளர்களின் உணவை சலுகை அடிப்படையில் கொடுக்க இவ்வரசு நடவடிக்கை எடுக்குமானால் அதனால் நன்மையடையக்கூடிய தோட்டத் தொழிலாளர்கள் இவ்வரசிற்கு கடமையுடையவர்களாக இருப்பர்.

தோட்டத் தொழிலாளர்களின் வாக்கினால் மத்திய மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சந்தான அரசின் நிதியமைச்சர் சரத் அமுனுகம அவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் உணவு பரிமாற்றம் பற்றி நன்கறிபவர். அதேபோல் இன்று சந்தான அரசின் மிகப் பெரிய பங்காளியான மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி) தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி நன்கறிவார்கள். அவர்கள் இவ்வேளையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாச்சலுகை கிடைக்க நடவடிக்கை எடுப்பார்களேயானால் அவர்களுக்கு இத்தோட்ட வாழ் மக்களின் மேல் கரிசனம் உள்ளது என்பதை காட்டிக் கொள்ள நல்ல சந்தர்ப்பமாக அமையும்.

ஆகவே, இச்சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்தும் முறையிலேயே அவர்களின் உண்மை சொரூபம் இலங்கை வாழ் மக்களுக்கு அறிமுகமாவதோடு முக்கியமாக தோட்ட வாழ் மக்களுக்கு ஒரு படிப்பினையாகவும் அமையுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஞாயிறு, போயா தினங்களில் 1 1/2 மடங்கு சம்பளம் மறுப்பு ! சம்பள நிர்ணய சபை சட்டம் மீறல் இ.தே.தோ.தொ.ச கடும் எச்சரிக்கை!

**விடுமுறை நாட்களான ஞாயிறு, போயா தினங்களில் வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்களின் வேலையளவை அதிகரித்தால் சட்ட நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம். இவ்வாறு இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.வேலாயுதம் அவர்கள் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கும், தோட்டக் கம்பனிகளுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

தோட்டங்களில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் போயா தினங்களிலும் வேலை செய்யும் தொழிலாளர்களின் வேலையானது ஐந்து முதல் ஏழு கிலோ வரையிலான கொழுந்து வழமையான நியமனத்திற்கு மேலாக கொண்டு வந்தால் மாத்திரமே அன்றைய



தினத்திற்கு 1½ மடங்கு சம்பளம் வழங்கப்படும் எனவும் அதற்கு குறைவாக கொண்டு வந்தால் வழமையான சம்பளம் மாத்திரமே வழங்கப்பட்டு வருவதாக தோட்டங்களிலிருந்து எமக்கு முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன.

இவ்வாறு ஞாயிற்றுக் கிழமைகளிலும் போயா தினங்களிலும் வேலைப்பழுவை அதிகரிப்பது ஒரு சட்ட விரோதமான செயலாகும். அதே வேளையில் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்கின்ற கங்காணிமார்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஏனைய சகல உத்தியோகத்தர்களுக்கும் 1½ மடங்கு சம்பளம் வழங்கப்படுகின்றது.

ஞாயிறு போயா தினங்களில் ஐந்து முதல் ஏழு கிலோ வரை அதிகரிப்பதன் மூலம் ரூபா 35 முதல் ரூபா 50 வரையில் தமக்கு கிடைக்க வேண்டிய மேலதிக வருமானத்தையும் அதற்குரிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி போன்ற கொடுப்பனவுகளையும் ஒவ்வொரு தோட்டத் தொழிலாளியும் இழக்க வேண்டியுள்ளது. இது கண்டனத்திற்குரிய செயலாகும்.

இச்செயற்பாடு கூட்டு ஒப்பந்தத்தையும் சம்பள நிர்ணய சபையின் ஏற்பாடுகளையும் மீறுகின்ற ஒரு சட்ட மீறலாகும் என பொதுச் செயலாளர் அவர்கள் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் சம்பள நிர்ணய கட்டளை சட்டத்தில் ஞாயிற்றுக்கிழமைகளிலும், போயா தினங்களிலும் வேலைக்கு அமர்த்தப்படும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் தாங்கள் வழமையான நாட்களில் நிறைவேற்றுகின்ற வேலையளவிற்கு, வழமையாக வழங்கப்படும் சம்பளத்தை 1½ மடங்கு வழங்கப்பட வேண்டும் என பணிந்துரைக்கின்றது. அச்சட்டத்தை அமுல் நடத்த தவறுகின்றவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு தொழிற் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் காணப்படும் தொழில் சட்ட அறிவின்மையையும் அவர்களது வறுமை நிலைமையையும் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தோட்டத் தொழிலாளர்கள் மீது இவ்வாறு உரிமை மீறுகின்ற செயலில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்க செயலாகும். தோட்ட நிர்வாகங்களின் இச்சட்ட வி[illegible] செயல்பாடு தொழிலாளர்களிடம் மேற்கொள்ளப்படும் ஒரு பகல் கொள்ளையாகும் (Day Robbery). எனவே, இம்முறையற்ற தொழிலாளர் உரிமை மீறல் நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகங்கள் உடன் நிறுத்துவதுடன், இச்சட்ட மீறல் செயல்பாடு இடம்பெற்றுள்ள தோட்டங்களில் சட்ட விரோதமாக மறுக்கப்பட்டுள்ள இக்கொடுப்பனவை உடன் வழங்க வேண்டும் என பொதுச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உதாரணமாக ஒரு ஞாயிற்றுக்கிழமை பல தோட்டங்களில் 1,00,000 பேர் வேலை செய்வார்களேயானால் அவர்கள் தங்களுக்கு சட்ட ரீதியாக கிடைக்க வேண்டிய 5,75,000 ரூபாவை ஒரு நாளைக்கு இழக்க வேண்டி வரும்.

எனவே, முறையற்ற சம்பள நிர்ணய சபையின் பரிந்துரைகளை மாற்றமின்றி அமுல்படுத்த வேண்டியதன் அவசியம் பிரதான தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்திலும் ஊர்ஜிதப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை இலங்கைத் தேசியத் தோட்ட தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 26/2 சில்வா லேன், ராஜகிரியவில் உள்ள 'குவினி' கிரபிக் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது